Aakash + BYJU'S

# THE COVAI MAIL

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 50 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, March 13-19, 2022, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

## Admissions Open

**Medical (NEET)**
**ENGINEERING (JEE)***
**Foundation (Class 8-10)**

** State Board Batches also Available*

Aakash + BYJU'S

Take Online Test for Instant Scholarship

Aakash iACST
Instant Admission Cum Scholarship Test

Get Up to 90%* Scholarship

*Terms & Conditions apply.

Scan the QR Code



## Aakash BYJU'S Advantage

- Get best of classroom and online learning
- 100% Digitalized classrooms
- Recorded video lectures
- Expert Faculty
- Well Researched Study Material
- Systematic & regular testing

### Aakashians Deliver Outstanding Results

**NEET UG-2021**




**JEE (Advanced) 2021**




## COIMBATORE BRANCHES

M. K. Complex, 1, East Periaswamy Road, **RS Puram**
**Ph : 8800013094 / 9311371548**

Near Suguna Kalyana Mandapam, **Avinashi Road, Peelamedu Post.**
**Ph : 8800013116 / 8448197578**

Download **Aakash App** GET IT ON Google Play Download on the App Store CALL (TOLL-FREE) **1800-102-2727** VISIT **aakash.ac.in**

# மீண்டும் பா.ஜ.க. தானா?



**சாணக்கியன்**
**தி கோவை மெயில்**

மூன்றாவது முறையாக பிரதமராக மோடி வருவதற்கு அச்சாரமிடும் வகையில் 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளதாகவே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

நடைபெற்று முடிந்த 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல், 2 ஆண்டுகளுக்கு பிறகு நடக்க இருக்கும் மக்களவைத் தேர்தலுக்கு முன்னோட்டமாக பார்க்கப்படுகிறது. இந்த 5 மாநிலத் தேர்தல் முடிவை பார்க்கும்போது 4 மாநிலங்களில் ஆட்சியை பாஜக தக்கவைத்துள்ளது. பஞ்சாப் மாநிலத்தில் ஆம் ஆத்மி கட்சியிடம் ஆட்சியை பறிகொடுத்துள்ளது காங்கிரஸ். மேலும், 4 மாநிலங்களில் அமைப்பு ரீதியாகவே காங்கிரஸ் பலவீனப்பட்டு இருப்பது தெளிவாகியுள்ளது.

உத்தரபிரதேச அரசியலைப் பொறுத்தவரை ஆட்சியில் இருக்கும் ஒரு கட்சி தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைப்பது கடந்த 50 ஆண்டுகளில் இதுவே முதல் முறை. அதேபோல, 5 ஆண்டுகள் முழுமையாக முதல்வராக யோகி ஆதித்யநாத் நீடித்து மீண்டும் முதல்வராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இது மிகப்பெரிய சாதனையாக பார்க்கப்படுகிறது. உ.பி. அரசியலைப் பொறுத்தவரை 2022 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பு, பின்பு என பிரித்துப் பார்க்க வேண்டும்.

காரணம், இதற்கு முன்பு நான்கு முனை போட்டியாக இருந்த உ.பி. அரசியல் இம்முறை இரு துருவ அரசியலாக மாறியிருப்பதை தேர்தல் முடிவுகாட்டுகிறது.
இந்த தேர்தலில் பாஜக, 41.3 சதவீத வாக்குகளையும், சமாஜ்வாதி கட்சி 32.06 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளன. பாஜக 255 தொகுதிகளையும், கூட்டணியாக சேர்ந்து 273 இடங்களையும் பெற்றுள்ளது. சமாஜ்வாதி தனித்து 111 இடங்களையும், கூட்டணியாக 125 இடங்களையும் பெற்றுள்ளது.

இதை தவிர்த்து பகுஜன் சமாஜ் கட்சி 12.88 சதவீத வாக்குகளையும், ஒரு இடத்தையும் பிடித்துள்ளது. காங்கிரஸ் 2.33 சதவீத வாக்குகளையும் 2 இடங்களையும் பிடித்துள்ளது. கடந்த தேர்தல் முடிவுகளை வைத்து பார்த்தால் இந்த தேர்தலில் பாஜக, சமாஜ்வாதி கட்சிகள் வளர்ச்சியை பெற்றுள்ளன. பிற கட்சிகள் பின்னடைவை சந்தித்துள்ளன. இதற்கு முக்கிய காரணம், சமாஜ்வாதியின் வாக்கு வங்கியை பார்த்தால் யாதவர்கள், இஸ்லாமியர்கள் முழுமையாக வாக்களித்துள்ளனர். பகுஜன் சமாஜ், காங்கிரஸ் கட்சிக்கு இதுவரை வாக்களித்து வந்த இஸ்லாமியர்கள் சமாஜ் வாதி கட்சிக்கு வாக்களித்துள்ளனர். காங்கிரஸ் கட்சியில் செல்வாக்கு மிக்க இம்ரான் மர்சூத் போன்றவர்கள் கூட சமாஜ்வாதி கட்சியில் ஐக்கியமாகியுள்ளனர். மேலும், ராஷ்டிரிய லோக்தள், எஸ்.பி.எஸ்.பி கட்சியுடன் கூட்டணி இருந்ததால் ஜாட், ராஜ்பர் வாக்குகளை கூட சமாஜ் வாதி பெற்றுள்ளது. இதனால் தான் சமாஜ்வாதி கட்சியின் வாக்கு வங்கி உயர்ந்துள்ளது.

அதேபோல, காங்கிரஸ் கட்சிக்கு காலம் காலமாக வாக்களித்து வந்த பிராமணர்கள் பாஜகவுக்கு வாக்களித்துள்ளனர். காங்கிரஸில் இருக்கும் பிராமண வாக்கு வங்கியை குறிவைத்து ஜிதின் பிரசாதாவை பாஜகவில் சேர்த்து 6 மாதங்களுக்கு முன்பே அவருக்கு மேல்சபை உறுப்பினர் பதவி கொடுத்து, அமைச்சர் பதவியை கொடுத்தது பாஜக. யாதவர்களும், ஜாதவர்களுக்கும் இருந்த முரண் காரணமாக சமாஜ்வாதியை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக பகுஜன் சமாஜ் கட்சிக்கு வாக்களித்து வந்த ஜாதவர் வாக்கு வங்கி பாஜகவை நோக்கி நகர்ந்துள்ளது.

இந்த மாறுதல்கள் காரணமாக, பகுஜன் சமாஜ், காங்கிரஸ் வீழ்ந்து, சமாஜ்வாதி மற்றும் பாஜக வாக்கு வங்கி வளர்ந்துள்ளது. இதுவரை உ.பி. தேர்தல் முடிவு உணர்த்துகிறது. மேற்கு உத்தரபிரதேசத்தில் ஜாட் மக்களுக்கு அதிருப்தி இருக்கிறது என்பதை உணர்ந்த அமித்ஷா, மேற்கு உத்தரபிரதேசத்தில் முகாமிட்டு ஜாட் இனத் தலைவர்களை சந்தித்து ஆதரவு கோரினார்.

அதேபோல, சமாஜ்வாதியுடன் கூட்டணியில் இருக்கும் ஜெயின் சௌத்ரியை பாஜக கூட்டணிக்கு அழைத்தார். இதுபோன்ற உத்திகளால் மேற்கு உ.பி.யில் பாஜக அதிக தொகுதிகளை கைப்பற்றியுள்ளது. 2024 இல் மோடி பிரதமராக, 2022 இல் யோகி முதல்வராக வேண்டும் என்ற அமித்ஷாவின் கோஷமும் மக்களிடம் எடுபட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக உ.பியில் தங்கியிருந்து தீவிரமாக பிரசாரத்தில் இறங்கிய பிரியங்கா காந்தியின் பிரசாரமும், அதிக பெண்களை களத்தில் வேட்பாளர்களாக இறக்கிய உத்தியும் பாஜக மற்றும் சமாஜ்வாதி என்னும் இருதுருவ அரசியலுக்கு இடையே முற்றிலும் எடுபடவில்லை.

**உத்தரகாண்ட்:** உத்தரகாண்ட் மாநிலத்தை பொறுத்தவரை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆட்சி மாற்றம் என்ற நடைமுறையே இருந்து வந்தது. ஆனால், இந்த முறை அது நடக்கவில்லை. பாஜக அங்கு தொடர்ந்து மூன்று முதல்வர்களை மாற்றியது. அதில் மூவரையும் ராஜ்புத் சமூகங்களில் இருந்தே நியமித்தது. இப்படிப்பட்ட சூழலில் அங்கு காங்கிரஸ் எளிதாக வெற்றிபெறும் சூழல் இருந்தது. இருந்தாலும், முதல்வர் வேட்பாளர் ஹரிஷ் ராவத்தை முன்னிறுத்துவதில் இருந்த குழப்பம் காரணமாக காங்கிரஸ் அங்கு மீண்டும் தோல்வியை சந்தித்துள்ளது. குறிப்பாக ஹரிஷ் ராவத் கூட தோல்வியை சந்தித்துள்ளார்.

இன்னொரு சுவாரசியமான விஷயம் என்னவெனில், இப்போதுள்ள பாஜக முதல்வர் புஷ்கத் சிங் தாமின் கூட 8,000 வாக்குகளில் தோல்வியை தழுவியுள்ளார். இந்நிலையில் புதிய முதல்வராக யாரை பாஜக நியமிக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். காங்கிரசை பொறுத்தவரை பாஜகவுக்கு எதிராக தானாகவே வெற்றிபெற்று விடுவோம் என்ற எண்ணத்தில் தேர்தலை அணுகியதாகவே தெரிகிறது.

1980 இல் இருந்த அதே நடைமுறையில் தான் இப்போதும் தேர்தலை அணுகி வருகிறது. இப்போதுள்ள காலகட்டத்தில் பல்வேறு மொழி, மதம், இன ரீதியாக வாக்கு வங்கியை திரட்டி புதிய புதிய கட்சிகள் உருவாகியுள்ளன.

இந்நிலையில், பாஜகவுக்கு எதிராக இயல்பாகவே வெற்றிபெற்று விடலாம் என்ற எண்ணமே, காங்கிரஸ் கட்சியின் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டது. கடந்த 5 ஆண்டுகளாக ராஜ்புத் இனத்தை சேர்ந்தவர்களை முதல்வர்களாக அமர்த்திய நிலையில், இந்தமுறை பிராமண சமூகத்தை சேர்ந்த ஒருவருக்கு இங்கு முதல்வர் வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற குரல் எழுந்துள்ளது.

**பஞ்சாப்:** பஞ்சாப்பில் முழுக்க முழுக்க காங்கிரஸ் தனது தலையில் தானாகவே மண்ணை அள்ளிப் போட்டுள்ளது. முற்றிலும் தவறான வியூகத்தால் தானாகவே வீழ்ந்துவிட்டது காங்கிரஸ். கடந்தமுறை பேரவைத் தேர்தலில் முன்னிறுத்தப்பட்டு முதல்வராக வெற்றிபெற்ற அமரீந்தர்சிங்கை மீண்டும் முன்னிறுத்தியிருந்தால் காங்கிரஸ் நூலிலையில் வெற்றிகூட பெற்றிருக்கலாம் அல்லது இவ்வளவு சரிவு காங்கிரசுக்கு ஏற்பட்டிருக்காது. ஒருவேளை அமரீந்தர்சிங்கை நீக்கியபிறகு மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்ட சித்துவை முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்தியிருந்தால் கூட இவ்வளவு பெரிய தோல்வியை காங்கிரஸ் பெற்றிருக்காது.

நேரு, இந்திரா காந்தி, மோடி என அனைத்து தலைவர்களிடமும் அடிபணியாக பின்னணி கொண்ட சீக் ஜாட் சமூகத்தை முற்றிலும் புறந்தள்ளிவிட்டு, தலித் சீக் சமூகத்தை சேர்ந்த சரண்ஜித் சிங் சன்னியை முதல்வராக அறிவித்ததை ஜாட் சமூக மக்கள் முற்றிலும் ஏற்கவில்லை.

அதேபோல, 38 சதவீத வாக்கு வங்கியை கொண்ட தலித் சமூகத்திலும் முழு வாக்கு வங்கியை காங்கிரசால் பெற முடியவில்லை. பிற ஹிந்துக்களிடமும் அங்கு ஆதரவை பெற முடியவில்லை. இதன் விளைவு, நுட்பமாக காய் நகர்த்திய அரவிந்த் கெஜ்ஜரிவால், மக்கள் சொல்லும் நபரையே முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்துவேன் எனக்கூறி அதன் முடிவுகளின் அடிப்படையில் மென்மையான தோற்றம் கொண்ட சீக் ஜாட் சமூகத்தை சேர்ந்த பகவத் மானை முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்தினார். இதன் விளைவு, காங்கிரஸ் தோற்கடிக்க வேண்டும் என முடிவெடுத்து அகாலிதளத்துக்கு வாக்களிக்கும் ஜாட் சமூகத்தினர் கூட இந்த முறை ஆம் ஆத்மிக்கு வாக்களித்துள்ளனர்.

அதேபோல, ஆபரேஷன் புளூ ஸ்டார் முதல் காங்கிரசுக்கு வாக்களிக்கும் எஞ்சிய ஹிந்துக்கள், சன்னியை முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்தியதால் பெரும்பான்மையாக ஆம் ஆத்மிக்கு ஆதரவு அளித்துள்ளனர். இதன் விளைவு ஆம் ஆத்மி 42 சதவீத வாக்குகளை பெற்று 92 இடங்களை பெற்று ஆட்சியை பிடித்துள்ளது. காங்கிரஸ் கட்சி 23 சதவீத வாக்குகளை பெற்று 18 இடங்களை மட்டுமே பெற்றது. சிரோன்மணி அகாலிதளம் கட்சி 18.38 சதவீத வாக்குகளுடன் 3 இடங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளது.

**மோடிக்கு எதிரான பிரதமர் வேட்பாளர் யார் என்பதை எதிர்கட்சிகளால் அடையாளம் காட்ட முடியாத சூழலை இந்த 5 மாநிலத் தேர்தல் மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. ஏற்கெனவே ஹிந்தி பேசும் வடமாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தலைவிட, மக்களவைத் தேர்தலில் மோடி தலைமைக்கு 10 முதல் 15 சதவீதம் கூடுதல் வாக்கு வங்கி கிடைத்து வரும் நிலை உள்ளது.**

அதேபோல, அமரீந்தர்சிங்குடன் கூட்டணியாக போட்டியிட்ட பாஜகவின் வாக்கு வங்கி 5.4 சதவீதத்தில் இருந்து 6.7 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த தேர்தல் அலையில் முதல்வரான சரண்ஜித் சிங் இரண்டு தொகுதிகளிலும், மாநில காங்கிரஸ் தலைவரான சித்து, முன்னாள் முதல்வரான பிரகாஷ்சிங் பாதல், முன்னாள் துணை முதல்வர் சுக்பீர்சிங் பாதல், முன்னாள் முதல்வர் அமரீந்தர்சிங் ஆகியோர் அதிர்ச்சி தோல்வி அடைந்துள்ளனர். இது காங்கிரசுக்கு பெருத்த பின்னடைவாகவே பார்க்கப்படுகிறது.

**கோவா, மணிப்பூர்:** சிறிய மாநிலங்களான கோவா, மணிப்பூர் ஆகியவற்றில் யார் ஆட்சியை பிடித்தாலும் அது பெரிய அளவில் அரசியல் முக்கியத்துவம் கிடைக்காது. ஆனாலும், கடந்தமுறை தனிப்பெரும் கட்சியாக அங்கு உருவெடுத்திருந்த காங்கிரஸ் இந்த முறை ஏதாவது ஒரு உத்தியை கையாண்டு ஆட்சியை பிடித்திருக்க வேண்டிய நிலையில், அதையும் தவறவிட்டதுடன், மேலும், பின்னடைவை சந்தித்துள்ளது. இது காங்கிரஸ் தொண்டர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல, ஆம் ஆத்மி, திரிணாமூல் காங்கிரஸ் போன்றவை சிறுபான்மையின வாக்குகளுக்குள் ஊடுருவி விட்டதால் காங்கிரஸ் அங்கு பலவீனமடைந்துள்ளது.

5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளை பார்க்கும்போது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆட்சி மாற்றம் ஏற்படும், அதில் குளிர்காய்ந்து வெற்றிக்கனியை சுவைக்கலாம் என்ற எண்ணத்தில் இருந்தது தான் காங்கிரஸ் தோல்வி அடைந்ததற்கான முக்கிய காரணம் என்பது தெளிவாகிறது. தேசிய அளவில் பாஜகவுக்கு மாற்று சக்தி என்ற அந்தஸ்தை காங்கிரஸ் தக்கவைத்துக் கொள்ளுமா, மக்களவைத் தேர்தல் வரும்போது காங்கிரஸ் தலைமையில் அணி அமைப்பதற்கு இந்த 5 மாநிலத் தேர்தல் மிகப்பெரிய முட்டுக்கட்டையாகவே மாறிவிட்டது.

அதேநேரத்தில், பாஜகவை பொறுத்தவரை மோடிக்கு எதிரான பிரதமர் வேட்பாளர் யார் என்பதை எதிர்கட்சிகளால் அடையாளம் காட்ட முடியாத சூழலை இந்த 5 மாநிலத் தேர்தல் மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. ஏற்கெனவே ஹிந்தி பேசும் வடமாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தலைவிட, மக்களவைத் தேர்தலில் மோடி தலைமைக்கு 10 முதல் 15 சதவீதம் கூடுதல் வாக்கு வங்கி கிடைத்து வரும் நிலையில், 2024 மக்களவைத் தேர்தலிலும் மீண்டும் மூன்றாவது முறையாக மோடி பிரதமராக வருவதற்கு அச்சாரமிட்டுள்ளது இந்த 5 மாநிலத் தேர்தல் முடிவுகள்.

### பிரசாந்த் கிஷோரின் பதிவு

“அனைத்து எதிர்க்கட்சிகளே. 2024 ஆம் ஆண்டு தான் இந்தியாவுக்கு உண்மையான போர் நடக்க போகிறது. முடிவுகள் அப்போது தான் தெரியும். மாநில தேர்தல் முடிவுகள் அதை முடிவு செய்யாது. (2024ம் ஆண்டு மோடி பிரதமர் என்று) உங்களை மனதளவில் மாற்ற முயல்கிறார்கள். பொய்களுக்கு இரையாகி விடவேண்டாம்” என தேர்தல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.



ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர் கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்டரிங்

# THE COVAI MAIL

SREE Annapoorna SREE Gowrishankar the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 50 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, March 13-19, 2022, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

# உண்மைக்கும் உழைப்புக்கும் கிடைத்த நோபல் பரிசு!

**ஆசிரியர்**
**தி கோவை மெயில்**

கோவை மாநகராட்சியின் முதல் பெண் மேயராக கல்பனா ஆனந்தகுமார் தேர்தலில் போட்டியிடுகிறார் என்று திமுக அறிவித்த பொழுது எல்லோருமே ஒரு நிமிடம் ஆச்சரியப்பட்டது உண்மை. பாரம்பரியமான திமுக குடும்பம், எளிமை, கட்சி தொண்டர் எனும் தகுதி இவற்றைத் தவிர வேறு எவ்விதமான பின்புலமும் இல்லாத கல்பனா கோவை மாநகராட்சியின் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது திமுகவுக்கும் அதன் தலைவர் ஸ்டாலினுக்கும் பெருமை சேர்த்திருக்கிறது.

பொதுவாக படித்த பெண்கள், எளிய பின்புலம் உள்ளவர்கள் அரசியலில் ஈடுபடலாம். ஆனால் பொறுப்புக்கு வருவது என்பது அபூர்வம். அது இப்போது நடந்து இருக்கிறது. ஒரு சாதாரண மனிதராக இருந்தவர் பொறுப்புக்கு வரும்போது அவரால் அனைத்து தரப்பு மனிதர்களையும் ஒரே சமயத்தில் அனுசரிக்க முடியும், அணுக முடியும். அந்த வகையில் சாதிக்க காத்திருக்கும் வணக்கத்திற்குரிய மேயர் கல்பனா அவர்களுக்கு வாழ்த்துகள். மக்களை நேரில் சந்திப்பேன், குடிநீர் வசதி, தெருவிளக்கு, சாலை வசதி என அனைத்து சேவைகளும் சீராக கிடைத்திட செயல்படுவேன் என்று கூறியதோடு தனது முதல் கையெழுத்தை மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிடம் கட்டுவதற்காக கையெழுத்திட்டு இருப்பது அவருடைய எண்ணத்தை காட்டுகிறது.

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலின் மகளிர் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு நடந்து முடிந்த நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் பெரும்பாலான பொறுப்புகளை மகளிருக்காக அளித்திருப்பது இங்கே கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அதன் உண்மையான பொருளை புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்பட்டு கோவைக்கும், கட்சிக்கும், மேயர் பொறுப்புக்கும் பெருமை சேர்த்திட வணக்கத்திற்குரிய மேயர் கல்பனா ஆனந்தகுமார் அவர்களை கோவை மெயில் சார்பாக வாழ்த்துகிறோம்.



## மாமன்றத்திடம் மக்களின் எதிர்பார்ப்புகள்

கோவை மாநகர மன்றத்துக்கு சமீபத்தில் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அதில் 50 சதவீதத்துக்கும் கூடுதலாக பெண்கள் மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. கோவை மாமன்ற வரலாற்றில் முதல் முறையாக ஒரு பெண், கோவை மேயர் ஆக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

அரசியல் அறிந்தவர்கள் அனைவரும் அடிக்கடி குறிப்பிடுவதுபோல மேயர் என்பதும், மாமன்ற உறுப்பினர் என்பதும் பதவி அல்ல; பொறுப்பு. மக்களின் தேவைகளை அறிந்து நிறைவேற்றி தரவே அந்த பொறுப்பு வழங்கப்படுகிறது. அந்த வகையில் வளர்ந்து வரும் தொழில் நகரமான கோவை மாநகரின் தேவைகள் ஏராளமாக உள்ளன. குடிநீர், போக்குவரத்து, உட்கட்டமைப்பு என்று பலதரப்பட்ட பணிகளும் வேண்டி மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

**அரசியல் அறிந்தவர்கள் அனைவரும் அடிக்கடி குறிப்பிடுவதுபோல மேயர் என்பதும், மாமன்ற உறுப்பினர் என்பதும் பதவி அல்ல; பொறுப்பு. மக்களின் தேவைகளை அறிந்து நிறைவேற்றி தரவே அந்த பொறுப்பு வழங்கப்படுகிறது. அந்த வகையில் வளர்ந்து வரும் தொழில் நகரமான கோவை மாநகரின் தேவைகள் ஏராளமாக உள்ளன.**

நகர மக்களின் எதிர்பார்ப்புகளில் முதலில் வருவது சாலைகள் தான். திரும்பிய பக்கமெல்லாம் சாலைகள் குண்டும் குழியுமாக தான் இருக்கின்றன. குடிநீர் குழாய்க்காக வெட்டிய குழிகள், சூயஸ் நிறுவனத்தினர் பல இடங்களில் வெட்டிய குழிகள் என்று தொடங்கி பல வகையான பள்ளங்களோடு நகரம் காட்சி தருகின்றது.

வாகனங்களைப் பயன்படுத்துவோரின் முதுகெலும்பை முறிக்கும் வகையில் சாலைகள் பரிதாபகரமாக உள்ளன. அவை மக்களின் உடல் நலத்தை பாதித்து, பணச் செலவு வைப்பதோடு சில நேரங்களில் உயிருக்கும் ஆபத்து விளைவிக்கக் கூடும்.

அதை போலவே இந்த பாலம் கட்டும் பணிகள் ஒரு தொடர்கதையாகவே போய்க்கொண்டு இருக்கின்றன. அதில் ஆயிரம் சட்ட சிக்கல்கள், நிர்வாக சிக்கல்கள் இருக்கலாம். ஆனால் அதற்கு பொதுமக்கள் எப்படி பொறுப்பாக முடியும்? அது எந்த வகையில் நியாயம்?

அவிநாசி சாலையில் மெட்ரோ வருகிறது என்பது மக்கள் நினைவிலிருந்தே மறைந்து விட்டது. இப்பொழுது மிக நீளமான மேம்பாலம் கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு முறை இந்த கட்டுமானப்பணி நடக்கும் பகுதியை கடக்கும்போதும் எத்தனை நேர விரயம் எத்தனை எரிபொருள் விரயம், பொருளாதார நஷ்டம் என்று சிந்திக்க வேண்டும். அதேபோல ஸ்மார்ட் சிட்டி என்ற பெயரில் நகரத்தை அழகுபடுத்துவது நிறுத்தப்பட்டு மக்களுக்கு பயனுள்ள பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அடுத்த மிக முக்கியமான பிரச்சனை கோவை நகருக்கான குடிநீராகும். நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை பாதுகாப்பான குடிநீர் இல்லாமல் பல்வேறு நகரங்கள் கிராமங்களைப் போலவே சிக்கலில் தவித்து வந்த கோவை நகர மக்களுக்கு பல சிரமங்களை தாண்டி சிறுவாணி தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்தது இதே கோவை நகர மன்றம் தான். ஆனால் இன்று குடிநீர் வினியோகத்தை சரியாக செய்ய முடியாமல் ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க இருப்பது காலத்தின் கோலம் என்பதைத் தவிர வேறு என்ன சொல்வது?

முன்பு மக்கள் தொகை குறைவாக இருந்த பொழுது சிறுவாணி குடிநீர் போதுமானதாக இருந்தது. பிறகு மக்கள் தொகை அதிகரித்தபோது அத்திக்கடவு திட்டம் வந்தது அதுவும் விரிவுபடுத்தப்பட்டது. ஏனென்றால் சிறிய பரப்பளவில் இருந்த கோவை நகரம் இன்று விரிவடைந்து கொண்டே போகிறது.

கோவையை சுற்றியுள்ள கிராமங்களில் இருந்த வடவள்ளி, கவுண்டம்பாளையம், மணிகாரம்பாளையம் என்று பல பகுதிகள் மாநகர எல்லைக்குள் வரும் பொழுது குடிநீர் வழங்கும் பொறுப்பு மாநகராட்சியை சேர்கிறது. என்னதான் மேம்பாட்டுக் கட்டணம் கட்டினாலும் தண்ணீரை உற்பத்தி செய்ய முடியாது. எனவே இதற்கு தேவையான முறையான நடவடிக்கைகளை கோவை மாநகராட்சி எடுத்து செயல்படுத்த வேண்டும்.

குறிப்பாக சூயஸ் நிறுவனத்தின் பணிகள், அதன் எதிர்கால நடைமுறைகள் குறித்து பல குழப்பங்களும் ஐயங்களும் மக்களிடையே நிலவுகின்றன. குடிநீருக்கான கட்டணம் அதிகமாகுமா, பொது குடிநீர் குழாய் குறைக்கப்படுமா, பழுது நீக்கும் சேவை எவ்வாறு இருக்கும் என்று பல வகையான கேள்விகள் எழுகின்றன.

மாமன்ற உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால் அதிகாரிகளை நேரடியாக அணுக முடியாத மக்களின் துயரம் சொல்லி மாளாது. எனவே அடிப்படைத் தேவையான குடிநீரை வரைமுறை படுத்தி மக்களுக்கு சரிவர கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

அடுத்து கோடைகாலம் வந்தால் போதும், சிறுவாணித் தண்ணீருக்கும் தட்டுப்பாடு வந்துவிடும். வழக்கமாக கிடைக்கும் இத்தனை மில்லியன் லிட்டரில் இருந்து குறைந்து, இவ்வளவு லிட்டர் தான் கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது. இது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் தொடர்கதையாக இருக்கிறது. இதற்கு ஒரு முடிவு கட்டி இதற்கு சரியான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

அடுத்து பெரும் தொழில் நகரமான கோவைக்கு தேவையான பல உட்கட்டமைப்பு வசதிகள் இங்கு இல்லை. மாநகராட்சிக்கு கீழ் இயங்கும் பள்ளிகள், சுகாதார நிலையங்கள் நல்ல முறையில் இயங்கி வந்தாலும் தனியார் பள்ளிகளோடு ஒப்பிடும்போது பின்தங்கியே உள்ளன. அதன் தரத்தை உயர்த்தி சீர்படுத்த வேண்டும்.

வளர்ந்து வரும் நகரமான கோவையில் குப்பை மேலாண்மை பெரும் சிக்கல் கொண்டதாக இருக்கிறது. ஒருபுறம் இவற்றை அகற்றுவது என்பதே ஒரு சிக்கல். மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று பிரிப்பதற்கு இன்னும் விழிப்புணர்வு, பயிற்சி, கூடவே அபராதங்கள் தேவை. அதேபோல இதைக் கையாள்வதிலும் சரியான அறிவியல் பூர்வமான முறைகளை கொண்டு வரவேண்டும்.

சிறு மழையைக் கூட தாங்காது என்ற நிலையில்தான் இன்னும் கோவை நகரம் உள்ளது. ஒரு மணி நேரம் மழை பெய்தால் போதும், நகரம் கிழக்கு, மேற்காக இரண்டாக பிரிந்து விடும். ஏராளமான மனித நேரம், எரிபொருள், நீர் என்று பலவும் வீணாகி நஷ்டம் ஆகிறது. எனவே அதற்கேற்ப மழைநீர் வடிகால் அமைத்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி நகரின் மழைநீர் சேமிப்பு அளவை அதிகரிக்க வேண்டும்.

மேலும் சாக்கடைகள் பல இடங்களில் பிளாஸ்டிக் மற்றும் பொருட்களால் அடைபட்டு நோய் பரப்பும் மையங்களாக திகழ்கின்றன. சேகரமாகும் சாக்கடை நீரை தகுந்த முறையில் சுத்திகரிக்கும் மையங்களை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு இல்லாமல் சாக்கடை நீரை ஆற்றிலும், குளத்திலும் விடுவது எதிர்கால தலைமுறைக்கு நாம் செய்யும் துரோகம்.

எல்லாவற்றுக்கும் மேலாக நகரின் மாஸ்டர் பிளான் பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ளது. அது தற்போதைய தேவைகளையும் உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டு விரைவில் வெளியிடப்பட வேண்டும். மலையளவு பணியாக தோன்றினாலும், கோவை மாமன்றம் மனது வைத்தால் மக்கள் பணிகளை செய்து முடிக்க முடியும். ஏற்கனவே அதனை செய்து காட்டிய வரலாறு கோவை நகராட்சிக்கு உண்டு. இப்போது இது கோவை மாநகராட்சியாக வளர்ந்துள்ளது. இப்போதுள்ள மாமன்றம் மக்களின் தேவைகளை முன்னெடுத்துச் சென்று நிறைவேற்ற வேண்டும் என்பதே மக்களின் ஏக்கம் கலந்த எதிர்பார்ப்பாக உள்ளது.

### ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கல்லூரி சார்பில்
## என்.எஸ்.எஸ் முகாம்

**தி கோவை மெயில்**

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் (என்.எஸ்.எஸ்) சார்பில் சிறப்பு முகாம் நடைபெற்றது.

தொண்டாமுத்தூரில் கல்லூரி முதல்வர் சித்ரா தலைமையில் தொடங்கப்பெற்ற இம்முகாமில் நாட்டு நலப்பணித்திட்ட முதல் அலகின் அலுவலர் சுபாஷினி அனைவரையும் வரவேற்றார். தொண்டாமுத்தூர் கிராமத்தலைவர், ரோட்டரி கிளப் சங்கத்தினர் ஆகியோர் முகாமில் கலந்து கொண்ட மாணவியரிடையே உரையாற்றினர். தொடர்ந்து நடைபெற்ற முகாமில் கல்லூரி மாணவியர் கிராமத்தின் அரசுப்பள்ளி, கோயில் மற்றும் பொதுவிடங்களைத் தூய்மைப்படுத்தினர். மகளிர் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சிகள், மனிதவிலங்கு மோதல் குறித்த விழிப்புணர்வு, கானுயிர் புகைப்படக் கலை, முதலுதவிகள் செய்தல் பற்றியும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேலும் ரத்த வகை கண்டறிதல், கண் பரிசோதனை, டிஜிட்டல் உலகம் குறித்த விழிப்புணர்வு, பணமில்லா பரிவர்த்தனை, பல் பாதுகாப்பு முகாம், தொழில் தொடங்க விரும்புவோருக்கான ஆலோசனை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முகாமின் நிறைவு விழாவில் பாரதியார் பல்கலைக் கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை கலந்து கொண்டு பேசினார்.

### மிராக்கிள் வெல்னஸ் கிளினிக்கின் சிகிச்சை:
## குணமடைந்தவர்கள் மகிழ்ச்சி

**தி கோவை மெயில்**

கோவை மாவட்டம் பொள்ளாச்சி பகுதியில் சக்தி குழும நிறுவனங்களின் கீழ் செயல்படுகின்ற மிராக்கிள் வெல்னஸ் கிளினிக்கில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் தங்களது சொந்த கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

மிராக்கிள் வெல்னஸ் கிளினிக், பொள்ளாச்சியில் தனது புதிய கிளையை கடந்த 2018 இல் துவங்கியது. பொதுமக்களுக்கு தேவையான அனைத்து விதமான சிகிச்சை முறைகளை, அலோபதி, சித்த மருத்துவத்தையும் வழங்கி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக பல்வேறு நோயினால் பாதிக்கபட்டு இங்கு சித்த மருத்துவ சிகிச்சை முறைகளை எடுத்துகொண்டவர்கள் தற்போது குணமடைந்துள்ளனர். அவர்கள் தங்களுக்கு அளிக்கபட்ட சிகிச்சை முறைகளையும், குணமடைந்த மகிழ்ச்சிகளையும் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

அப்பொழுது பேசிய சக்தி குழுமங்களின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் மாணிக்கம், மற்றும் மருத்துவர் அருள் கூறுகையில்: இங்கு மனத உடலில் ஏற்படும் இதய நோய்கள், புற்றுநோய், நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு, ஒவ்வாமை, போன்ற பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கபட்டு வருகின்றது.

நோயாளிகளின் உடல் எந்த மருத்துவத்தை விரைவில் ஏற்று கொள்கின்றதோ அந்த மருத்துவத்தை உடனுக்குடன் வழங்குவதால் நோயாளிகள் விரைவில் குணமடைந்து செல்வதாக தெரிவித்தார்.

மேலும் கல்லீரல் நோயினால் பாதிக்கபட்டு சிகிச்சை பெற்ற நோயாளி பாலா கூறும் பொழுது, பல்வேறு தனியார் மருத்துவமனையில் ஆங்கில மருத்துவத்தை எடுத்து வந்த நிலையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை தான் மேற்கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து பல்வேறு இடர்பாடுகளை தாண்டி இந்த மருத்துவமனைக்கு வந்தேன். மருத்துவம் எடுத்து கொண்ட ஒரு வாரத்தில் மீண்டும் எனது கல்லீரல் செயல்பட ஆரம்பித்தது. சில வாரங்களில் கல்லீரல் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பியுள்ளது என தெரிவித்தார்.

*Land acquisition for airport expansion*

# Authorities hope to complete acquisition by 2022 end

David Karunakaran
The Covai Mail

Director of Coimbatore International Airport conveyed that he hopes that the Land acquisition for airport expansion may be over by the end of this year and the expansion work could also start following that.

Senthil Valavan, the Director shared this while addressing the members of the Airport Advisory Committee at a meeting held on Wednesday.

A range of topics related to the development of the airport were discussed during the meeting.

It was held under the chairmanship of Coimbatore MP P.R. Natarajan. This meeting takes place once in 6 months, to discuss on how to enhance various service offered by the Airport, improve passenger facilities and also receive suggestions from the committee members related to other services connected with the airport.

"Right from 2010, for the expansion of airport, land is being notified and acquired; it is a long and pending issue, and a tough process. Revenue Authorities are working hard and we are hoping to get it completed within 2022 and start the expansion work", said Senthil Valavan.

Expansion of bus connectivity to airport, improvement of service roads on approach to the airport, streamlining of SITRA Road Junction, taking action on the dumping of construction debris near airport sides were among the important things discussed at the event.

The airport director conveyed that resurfacing of the runway, expansion of turnpad, construction of new domestic departure terminal building are among the upcoming projects. The Chairman of this meeting and Member of Parliament, Coimbatore PR Natarajan asked the director to appoint a person to provide reports on the actions taken on the suggestions made during the previously held Advisory Committee Meetings, and provide updates.

Leela Alex, District Revenue Officer, Rajgopal Sunkara, Commissioner of Coimbatore Corporation, PRG Arun Kumar, MLA, Kavundampalayam Constituency, representatives of various airlines, members of the industry associations, hoteliers association, travel and taxi associations were present.




*From Left: Senthil Valavan, Leela Alex, Rajgopal Sunkara and PR Natarajan during the event.*

# KPRIET bags AICTE Award!

The Covai Mail

KPR Institute of Engineering and Technology (KPRIET) has been bestowed with first runner up All India Council for Technical Education (AICTE) Lilavati Award on Tuesday.

The award was presented for their outstanding work towards human empowerment under the sub theme Environment, Sanitation and Hygiene.

The awards ceremony was held at the AICTE Headquarters, New Delhi, and AICTE Chairman Anil Sahasrabudhe gave away the awards. M.Akila, Principal and Professors Geetha, Kavitha and Rithika received this award.

Around 500 teams participated in the competition. The awards were conferred for the teams contribution towards a more equitable society.




# SNS Tech & Govt. to promote new technologies in Agriculture



*Members of SNS CT and IMTI, TN Govt with the MoU.*

The Covai Mail

To improve farm productivity, agriculture management and also to promote the latest technologies in agriculture and irrigation fields, SNS College of Technology, Coimbatore (SNS CT) and Irrigation Management Training Institute (IMTI), TN Govt., recently signed an MoU.

The collaboration also includes academic and research partnerships. A press release from SNS Institutions said that the MoU will focus on arriving at the proof of concept solutions for farm productivity and irrigation management using AI/ML techniques, knowledge sharing through seminars/ conferences and training programs. Etc.

Also, collaborative research will be undertaken to address problems related to rural entrepreneurship and rural market assessment.

Through this partnership, the students of the college will get the opportunity to attend and assess various agricultural related training programs organized by IMTI to improve the adoption of modern irrigation practices enhancing agricultural productivity which will eventually lead to helping farmers get higher incomes.

*Rotary Aakruthi celebrates Intl.Women's Day*

# "Stop abusing girl children & women!"

The Covai Mail

Rotary Club of Coimbatore Aakruthi celebrated International Women's Day on Tuesday.

In connection with this day, the club held Women and Girl Child Abuse Awareness Walkathon near Cosmopolitan Club, Race course area.

Vetri Selvan, Deputy Mayor of Coimbatore Corporation and 'Kovai' Babu, Councillor, Ward 22 took part in the event as special guests. Rotary International District 3201's First Lady Shanthi Rajasekhar flagged off the walkathon.

Rtn. Kavitha Gopalakrishnan, President, Rtn. AKS Leema Rose Martin, and other Rotarians of the club made the arrangements.

Uma, Journalist from Kalaignar TV took part in this event as the special invitee and shared her thoughts about gender equality. She opined that the concept of women's safety should be shared and talked more with men than with women.

Also to appreciate women of various professions, the club organized Women Excellency Awards at Cavalier Dr. D. Jayavarthanavelu Auditorium, GKNMH. 15 woman lawyers, 15 lady taxi drivers and 15 lady auto drivers and 20 sports women, 25 nurses and 5 doctors were honored at the event.




*Shanthi Rajasekhar and Vetri Selvan, Flagging off the rally. Rtn.Kavitha Gopalakrishnan, Rtn. AKS Leema Rose Martin and other Rotarians taking part in the rally.*

**Treat women as Equals!** - *Rtn.Kavitha Gopalakrishnan.*



Abuse of women and children is reported in many places across the world, and we organized this walkathon to emphasize that this abuse has to stop. Men and the society should stop seeing women as materials and treat them as their equals and counterparts. They should give them (women) their due respect.

At this year's Women's Day celebration, we honored women who have been service minded and played various roles in the society. We also have provided sewing machines to 2 differently-abled women and to 2 single women, so that it could be of support to their livelihood, and we have also provided Rs.1.5 lakhs to a financially poor woman, for her heart operation.

## Mumbai to US with Amazon!

The Covai Mail

Folkulture is a Mumbai based home decor brand run by husband-wife duo Chaiti Jain and Rinkesh Mehta.

The business grew from within the confines of their home to a popular home decor label in the US market. It was one of the first businesses from India to join Amazon Global Selling in 2015 and widen its customer base.

Chaiti Jain, co-founder of Folkulture says "Our business is growing 100% YoY and we are optimistic about continued growth and global expansion through Amazon."

The number of sellers has grown nearly 30% YOY since January 2020 via this platform. These exporters are showcasing over 140 million Made in India products to Amazon customers in 200+ countries and territories across the world.

*1st SF Arts & Science College under Bharathiar Univ.*

# Rathinam CAS receives A++ Grade from NAAC

The Covai Mail

The NAAC Accreditation for 3rd Cycle of Rathinam College of Arts and Science was declared recently and the college has secured A++ Grade with a CGPA of 3.6.

A three member NAAC Peer Team Committee visited the campus on first week of March for the assessment. During that occasion, R.Muralidharan, Principal, gave a detailed presentation about the performance of the Institution.

The Committee members inspected the facilities of the college and observed various activities such as Curriculum Design, Teaching Learning Process, Research Publications and Patents, Placement, Sports Achievements, Faculty Awards and Achievements, etc.

A meeting was held with stake holders such as Parents, Students, Alumni and Faculty during the visit. A cultural event was organized on the first day of the visit to exhibit the talents of the students.

Based on the Self Study Report (SSR) submitted earlier by the college to NAAC, Bengaluru and recommendations made by the Peer Team committee at the time of the visit, the college has been Accredited with A++ Grade on March 8th.

The College's Management celebrated this achievement with the Faculty and students.



*Prof.Manickam, CEO of the college celebrating this accomplishment with the Principal Muralidharan (2nd right) faculty of the college and students*

## Axis NIFTY Midcap 50 Index Fund launched

The Covai Mail

Axis Mutual Fund, one of the leading asset management companies in India announced the launch of Axis NIFTY Midcap 50 Index Fund (an open ended Index Fund tracking the NIFTY Midcap 50 Index), recently.

The fund will track the NIFTY Midcap 50 Index TRI. The NFO opens for subscription on 10th March 2022 and closes on 21st March 2022. The minimum application amount is INR 5,000 and in multiples of INR 1, thereafter.

The Axis NIFTY Midcap 50 Index Fund follows a rule-based passive investing strategy that endeavours to deliver market-linked returns. This hassle-free and low cost investing solution is ideal for investors looking for exposure to midcaps, while following a disciplined and systematic format of investing.

Investors can look to invest through various systematic options like SIPs, STP's to adopt a more disciple approach or invest via lumpsum.

*CEBACA holds Construction Industry Stakeholders Meeting*

# "Increase Liquidity, Be ready for opportunity!"

The Covai Mail

"Traders are crucial to construction sector, and builders are vital for traders to conduct trade; we both depend on each other, and we must often exchange our experiences and the knowledge gained while handling hardships" expressed V.Palaniswamy, President,Coimbatore Builders And Contractors Association (CEBACA).

He shared this at CEBACA's Construction Industry Stakeholders Meeting held recently.

Considered an important platform by name 'Traders' Walk with CEBACA', this event has been rebranded recently as Construction Industry Stakeholders Meeting recently.

10 representatives of different Trading company catering to construction industry took part and shared how they overcame the lockdown and market volatility that was caused by pandemic.

Venkatesh, VSAT; Palaniappan, Sky&Sky; Jagan, Kajaria Tiles; Alagu, ALST&Co; Ramakrishnan, SVA Blue Metals & RMC; Somasundaram, Smart Window System; Muthu Senthil, Yuvaraj Floors; Nivin, Zaron Industries; Lakshman, Vignesh Electric and Ramachandran, Prathien Infrastructure shared the struggles they experienced & strategies they followed to overcome the business hardships they faced due to the pandemic.

Representatives from Ramco Cements, SS Marbles also shared their opinions.

***Ideas expressed in the events:***

Learning to conduct business online has been very useful. Consumers are going for ways to cut cost by investing in efficient home solutions (like Solar). They are looking for innovative home products.

The market was VUKA ( Volatile, Uncertain, Complex, Ambiguous) during Covid's peak and the same trend may continue following another wave or due to war, hence it is a must to have liquid cash worth for 6 months. The first wave had taught everyone this.

To combat VUKA we need another VUKA (Vision Understanding Clarity and Agility)

They shared the market dynamics has changed, and 'Cash and Carry' mode is taking good hold in the business today.

Few of them expressed that the support from banks have not been immense, hence prior financial planning in the coming days should be made. Many speakers expressed that they didn't not cut the salary of their staff not reduced their workforce.

Speaking positively, Muthuraman of Lakshmi Ceraamics said that they achieved 21% growth after Covid's serious wave.

He said his company had assessed the mistakes and places for improvement earlier, and was looking for the apt time to make a change in the fundamentals of their operations.

Covid, out of the blue, became the time for them to do the transformation. He said the market today has consumers willing to buy products and go for expansion, and the scope has been good for them, so far. Whosoever gives them (the customers) quality products, will win.

He said he had sold off some of his assets to maintain liquidity, during the pandemic, and it has been helpful. He shared with all that, they have to increase their liquidity and be prepared for the opportunities.




*Muthuraman of Lakshmi Ceraamics addressing the CEBACA Members and Traders during the program.*

## Cry Babee's new product for infants

The Covai Mail

Tiruppur based baby products shop Cry Babee celebrated its 1st anniversary by launching a new special product for infants.

The product is herbal clothing for babies. The company claims that the colours used in the fabric are natural ones extracted from vegetables, flowers and dyes and are safe for babies.

This launch coincided with Women's Day celebration at the store, where various women entrepreneurs from Tiruppur came together to celebrate the occasion and the new product's launch.

*To Advertise in*
THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL
**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

RNI Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from #2-F, Trishank Apartment, G.K.D Nagar, Nethaji Road, Papanaikenpalayam, Coimbatore - 641 037 and Printed at Newsmen Associates Limited, #1, Sidco Industrial Estate, Kurichi, Coimbatore - 641 021. Editor: C.Srinivasan

# The 8 Words that'll lead to Success!

*- Hemalatha Annamalai, Founder, Ampere Vehicles*




*Hemalatha Annamalai addressing the gathering. From Left: R.Manimegalai, G.Chandramohan, M.Devasena, Co-Chairperson of Women Empowerment Cell during the celebrations.*

The Covai Mail

"Small beginning, Incremental improvement, Sustained progress and Monumental possibilities are the eight words that will lead to success," expressed Hemalatha Annamalai, Founder, Ampere Vehicles at the Women's Day Celebration of PSG Institute of Technology and Applied Research (PSG iTech).

This event was arranged by the Women Empowerment Cell (WEC) of the college and Hemalatha was the special guest of the program. G.Chandramohan, Principal of the college shared the achievements of girl students and women faculty members at PSGiTech. He also appreciated the works carried out by the women empowerment cell.

***Be Swift and Technically competent in Biz!***

Hemalatha shared her successful entrepreneurship journey, the various challenges encountered and the ways to handle challenging situations. She stressed on the importance of perseverance, determination and guts, the key features to carve a niche in the filed we choose. She expressed that the most important attributes in business are swiftness and technical competency rather than the size. The four major points for making the most of ourselves are giving paramount importance to health and inner well-being, spending quality time with the family, working until last minute and taking up social responsibility.

Prizes were distributed to the winners of various events that were held in connection with Women's Day. Prof. Manimegalai, Chairperson of the Women Empowerment Cell and members of the WEC made arrangements to make this event a fruitful one for the participants.

## Pump manufacturers on brink of collapse!

The Covai Mail

Coimbatore which is also called as Pump City is seeing a moment where the industry experiences a threat like never seen before.

The industry has been witnessing raw materials' cost reaching new highs for unclear reasons, and now due to the Ukraine-Russia war, the cost of Iron, Steel, Copper and Aluminium have all shot up greatly, leaving various stakeholders of the industry in puzzled state.



*K.V.Karthik*

In the last 7 days since the start of the war, copper prices have increased by Rs.56, Aluminium by Rs 40, Pig Iron by Rs 7, and Steel by Rs 10.

Southern India Engineering Manufacturers' Association (SIEMA) President K.V.Karthik said "The cost to manufacture a pumpset has risen by 50% with reference to 2020 material prices. The pump manufacturers were not able to pass on the entire extent of the price to the customers due to market resistance," via a press release.

"Increase of Pumpset prices have partially offset the cost of manufacture, but have led to a severe slowdown in demand. Further increase in pump prices will pull the demand down further," he added.

K.V.Karthik expressed that for the past one and half years, MSMEs have requested the Union Government through various mediums to control the raw material price hike. He has again appealed to the government to help the industry at this grave hour.

"If raw material prices are not controlled, the 10,000 crores Coimbatore Pump Industry providing employment to about lakh persons will face an existential crisis and several MSME pump manufacturers will cease operating in the next few weeks," he underlined.

## KASC's BioTech department signs 3 MoUs

The Covai Mail




*C.A.Vasuki and Aravindh Selvaraj exchanging the MoU.*

The Department of Biotechnology of Kongunadu Arts and Science College (KASC) recently signed three valuable MoUs with different organizations recently, with the aim to improve the students' skills in core and other domains.

All the MoU were signed by C.A.Vasuki, Secretary & Director, KASC with the respective representatives of the three organizations, in the presence of M.Lekeshmanaswamy, Principal, S.R.Madhan Shankar, Dean Academics, KASC.

***Enhancing entrepreneurial mindsets:***

To enhance the entrepreneurial mindsets among students, the college announced collaboration with Millennialz Training and Consulting Services Pvt Ltd, Coimbatore.

An Entrepreneurship development certificate course under Biotechnology will be a part of this MoU, and placement for the trained students will be provided.

Manikandan, Managing Director of Millennialz Training and Consulting Services signed the MoU with the Department. Prof.B.Vishnupriya will be the coordinator of the activities under this MoU.

***Man-power Development & Beyond:***

The Department signed a MoU with ELIES Biotech with the aim to jointly conduct activities related to Manpower Development (Training), Industry Engagement, Government Engagement, Grants, International Engagement and Research & Development in mutually identified areas including Plant tissue culture, Natural Farming, Integrated Farming, Mushroom Cultivation and value addition, Soil and Water testing, etc.

Aravindh Selvaraj, Executive Director & CSO of ELIES Biotech signed the MoU with the Department. S.Bhargavi will be the coordinator of the activities under this MoU.

***Skill development:***

To enhance various soft skills of the students the Department has signed a MoU with Mediva Labs. The MoU aims to create avenues and to bridge the gap between academia and the Industries. The focus is also on enabling the students to master the skill-set like critical thinking, problem-solving, creative thinking, better communication and networking to be a successful entrepreneur.

Vijayalakshmi Venkataraman, Director, Mediva Labs signed the MoU with the Department. Prof.R.Sathish Kumar will be the coordinator of the activities under this MoU.






# சந்தோஷமாக இருப்பதற்கு ஏதேனும் செய்தே ஆக வேண்டுமா?

தி கோவை மெயில்

**உங்கள் இயல்பில் ஏற்கனவே நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால், உங்கள் வாழ்க்கையே மகிழ்ச்சியின் வெளிப்பாடாக இருந்தால், பிறகு இந்த உலகத்தில் எந்தவிதமான சச்சரவுகளும் இருக்காது. ஆனால் உங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சியைத் தேடி ஓடுவதில் செலவழித்தால், உலகத்தில் எப்போதும் போராட்டங்கள் இருந்து கொண்டே இருக்கும்.**

சத்குரு: மகிழ்ச்சி என்பது உங்களைச் சுற்றி இருப்பவர்களிடமிருந்து கடனாக பெறப்படும் ஒரு பொருள் என்பது போல் பேசுகிறீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கும், வெளியில் என்ன நடக்கிறது என்பதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இப்போதைக்கு உங்களுடைய சக்திகள் அனைத்தும் வெளிப்புறச் சூழ்நிலைகளுக்கு ஆழமாக அடிமைப்பட்டுக் கிடப்பதால், அந்த வெளியுலகம்தான் உங்கள் உள்நிலை மகிழ்ச்சியைத் தீர்மானிக்கிறது. இதுபோன்ற சூழ்நிலையில் போராட்டங்களைத் தவிர்க்க முடியாது. இந்த உலகத்தில் போராட்டம் என்பதே ஒருவர் சந்தோஷத்துக்கும் மற்றவர் சந்தோஷத்துக்கும் இடையேதான் நடக்கிறது. என் சந்தோஷம் சிவன், உங்கள் சந்தோஷம் அல்லா. இப்படி இருந்தால் இருவரும் சண்டை போட்டாக வேண்டும்.

நம்முடைய இயல்பிலேயே நம்மால் சந்தோஷமாக இருக்க முடியாது என்று நாம் முடிவு செய்துவிட்டோம். மகிழ்ச்சியாக இருப்பதற்காக நாம் எதையாவது செய்தாக வேண்டும். இந்த உலகத்தில் சந்தோஷமாக இருப்பதற்காக நீங்கள் ஏதாவது செய்ய வேண்டுமென்றால், பிறகு மற்றவர்களும் தங்களை சந்தோஷமாக வைத்துக்கொள்ள வேறு ஏதோ ஒன்றைச் செய்வார்கள். நாளையோ, நாளை மறுநாளோ நம்முடைய பாதைகள் ஒன்றுக்கொன்று குறுக்கிட்டு, நாம் சண்டையில் இறங்குவோம். நாம் அனைவரும் சகோதரர்கள் என்று பாவனை செய்தாலும், நம்முடைய சந்தோஷத்துக்கு ஏதாவது தடை வந்துவிட்டால், அடுத்தவரை அடித்து வீழ்த்தவும் தயங்க மாட்டோம்.

இந்தக் கம்பத்தில் ஏறுவதுதான் உங்களுடைய இப்போதைய சந்தோஷம் என்று வைத்துக் கொள்வோம். இப்போது யாரோ ஒருவர் அந்தக் கம்பத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு, இது புனிதமான கம்பம், நீங்கள் இதன் மீது ஏறக்கூடாது என்று சொல்கிறார். அவர் அப்படி உங்களை தடுத்து நிறுத்திய கணத்திலேயே, நீங்கள் மகிழ்ச்சியை இழந்து விடுகிறீர்கள். பலவீனமானவராக இருந்தால், அங்கிருந்து போய்விடுவீர்கள்; பலமுள்ளவராக இருந்தால், அவரை கீழே இழுத்துத் தள்ளிவிட்டு, கம்பத்தின் மீது ஏறுவீர்கள். ஏனென்றால், அந்தக் கம்பத்தில் ஏறுவதில்தான் உங்களுடைய சந்தோஷம் இருக்கிறது என்பதால் அதில் எப்படியாவது ஏறிவிட வேண்டும் என்று நினைக்கிறீர்கள். ஆனால் நீங்கள் ஏற்கனவே சந்தோஷமாக இருந்தால், அந்தக் கம்பத்தின் மீது நீங்கள் ஏற விரும்பும்போது, அந்த மனிதர் 'இந்தக் கம்பத்தின் மீது ஏறாதீர்கள்' என்று சொன்னால், நீங்கள் சென்று வேறொரு கம்பத்தில் ஏறிக் கொள்வதில் உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இருக்கப் போவதில்லை.

உங்கள் இயல்பில் ஏற்கனவே நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால், உங்கள் வாழ்க்கையே உங்கள் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக இருந்தால், பிறகு இந்த உலகத்தில் எந்தவிதமான சச்சரவுகளும் இருக்காது. ஆனால் உங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சியைத் தேடி ஓடுவதில் செலவழித்தால், இந்த உலகத்தில் எப்போதும் போராட்டங்கள் இருந்து கொண்டே இருக்கும். மக்களுக்கு நீங்கள் எவ்வளவுதான் கல்வியறிவு புகட்டினாலும், எத்தனை நாகரீகத்தைக் கற்றுக் கொடுத்தாலும், அவர்கள் சண்டையிட்டுக் கொள்வார்கள்.

நான் இயல்பாகவே மகிழ்ச்சியாக இருக்கும் வகையில் என்னுடைய சக்திகளை நான் ஒழுங்கு படுத்திக் கொண்டால், பிறகு என் வாழ்வில் எது நடந்தாலும், என் மகிழ்ச்சி மட்டும் குறையவே குறையாது. அப்போது நான் வாழும் சூழ்நிலைக்கு என்ன தேவையோ அதை மட்டும் செய்வேன். எதையாவது செய்ய வேண்டும் என்கிற கட்டாயம் எனக்கு இருக்காது. எதையுமே செய்யாமல் கூட வெறுமனே அமர்ந்திருக்க முடியும். சூழ்நிலையைப் பொறுத்து நான் செயல்படுவேன். இல்லையென்றால் வெறுமனே அமர்ந்து கொள்வேன்.

ஆனால் தற்போது நிறைய பேர் மகிழ்ச்சியைத் தேடிச் செல்லும் பயணத்தில், இந்த பூமியையே கொளுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக, இந்த உலகத்தில் 50% பேர் சோம்பேறிகளாக இருக்கிறார்கள். உலகில் இருக்கும் 700 கோடி பேரும் கடும் உழைப்பாளிகளாக இருந்தால், இந்த உலகம் இன்னும் 10 வருடங்களுக்குக் கூட நீடிக்காது; அழிந்துவிடும். இந்த உலகம் இன்னும் இருப்பதற்கு உழைப்பாளிகள் காரணமல்ல; சோம்பேறிகள்தான் காரணம். அவர்கள்தான் உண்மையிலேயே இந்த உலகத்தைக் காப்பாற்றி வருகிறார்கள்.



உழைப்பாளிகள் எனப்படும் பிரிவினர் நல்ல நோக்கங்களுடனும், அதேநேரம் முழு முட்டாள்தனத்துடனும் இந்த பூமியை சிதைக்கிறார்கள். மக்களுக்கு நன்மை செய்வதைப் பற்றி அவர்களுக்கு உயர்ந்த நோக்கங்கள் இருக்கலாம். ஆனால் அவர்களுடைய நோக்கங்கள் நிறைவேறி விட்டால், இந்த உலகம் மிஞ்சியிருக்காது. எனவே மகிழ்ச்சியைத் தேடி ஓடாதீர்கள். உங்கள் மகிழ்ச்சியை எப்படி உலகத்துக்கு வெளிப்படுத்துவது என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தால், அதில் மகிழ்ச்சியைத் தேடிய கணங்களை விட, மகிழ்ச்சியை வெளிப்படுத்திய கணங்கள்தான் அழகானவை என்பதைப் பார்ப்பீர்கள்!

---

## இந்துஸ்தான் கல்லூரியில்
# 'சிம்ஹி' விருதுகள் வழங்கும் விழா



விருதுபெற்ற பெண்களுடன் (இடமிருந்து) கருணாகரன், கவிதாசன், கோவை மேயர் கல்பனா ஆனந்த் குமார், சரசுவதி கண்ணையன் மற்றும் ஜெயசுதா.

தி கோவை மெயில்

இந்துஸ்தான் கல்வி அறக்கட்டளை சார்பாக உலக மகளிர் தினத்தை போற்றும் வகையிலும், இக்கல்வி அறக்கட்டளை துவங்கி 30 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் வகையிலும் இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் "சிம்ஹி விருதுகள்" 2022 என்ற பெயரில் பெண்களுக்கு விருது வழங்கும் விழா நடைபெற்றது.

தன்னலமற்று, சமுதாயத்தில் பொதுசேவை செய்து கொண்டிருக்கக் கூடிய பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு விருது வழங்கப்பட்டது. 22 பெண்களைத் தேர்ந்தெடுத்து, விருது வழங்கி இந்துஸ்தான் கல்வி அறக்கட்டளை கௌரவப்படுத்தினர். மேலும் இவ்விருதில் தேர்வானவர்களை, தேர்ந்தெடுக்க ஒரு தேர்வுக்குழுவும் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.

சிம்ஹி 2022 விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்கு சான்றிதழ்களும், விருதுகளும் வழங்கப்பட்டன. இவ்விருதினை வழங்குவதற்கு உண்டான நோக்கம் சமுதாயத்தில் தன்னுடைய தன்னலமற்ற நற்செயலுக்கு அங்கீகாரம் கிடைக்காத பெண்களை உற்றுநோக்கி தேர்ந்தெடுத்து இவ்விருதினை வழங்குவதன் மூலம் அவர்களுடைய பணியினை மேன்மேலும் உற்சாகத்துடன் இச்சமுதாயத்திற்கு செய்ய இயலும். இவ்விழாவில் கோவை மாநகராட்சி மேயர் கல்பனா ஆனந்த் குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார். ரூட்ஸ் கம்பெனியின் இயக்குனர் கவிதாசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

மேலும் இந்தஸ்தான் கல்வி நிறுவனங்களின் அறங்காவலர் சரசுவதி கண்ணையன், செயலர் பிரியா சதீஸ்பிரபு, முதன்மை கல்வி அதிகாரி கருணாகரன், அனைத்து கல்லூரி மற்றும் பள்ளி முதல்வர்கள், துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள், மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## சக்தி நிதி நிறுவனத்தின்
# புதுப்பிக்கப்பட்ட கிளை திறப்பு

தி கோவை மெயில்

சக்தி பைனான்ஸியல் சர்வீசஸ் (எஸ்.எஃப்.எஸ்.எல்.) நிறுவனத்தின் புதுப்பிக்கப்பட்ட பொள்ளாச்சி என்.பி.டி. கிளை சமீபத்தில் திறக்கப்பட்டது.

இந்தக் கிளையை டாக்டர் மகாலிங்கம் பொறியியல் கல்லூரி தாளாளர் ஹரிஹர சுதன் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், மாறி வரும் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப பல புதிய சேவைகளை அளித்து வரும் சக்தி நிதி நிறுவனத்தினை அவர் பாராட்டினார்.

கம்பெனியின் இயக்குநர் ஸ்ருதி பாலசுப்ரமணியம் பேசுகையில், சக்தி பைனான்ஸியல் சர்வீசஸ் நிறுவனம் அதி நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு பாதுகாப்பு வசதிகளை வழங்கி வருவதில் முன்னோடியாக திகழ்கிறது என்றார்.

நிறுவனத்தின் இயக்குநர் நைனன் வர்கீஸ் பேசுகையில், சக்தி பாதுகாப்பு பெட்டக வசதி பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 24 மணி நேர பாதுகாப்பு, பயோ மெட்ரிக் வசதி, சி.சி.டி.வி. மோஷன் சென்சார், பல அளவுகளில் லாக்கர் வசதி, சுலபமான வேலை நேரம் போன்றவை அடங்கும். இன்றைய காலத்திகேற்ப மொபைல் போன் செயலி மூலம் முதலீடுகளை நிர்வகிப்பது, ஆன்லைன் மூலம் லாக்கர் கட்டணம் செலுத்துதல் உள்ளிட்ட பல புதிய வசதிகளும் உள்ளன என்று கூறினார்.

விழாவில் பொது மேளாலர் ஆனந்த் நஞ்சன் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

---

## மேம்பால பணிகள்:
# விரைந்து முடிக்க திட்டம்



தி கோவை மெயில்

அதிநவீன தொழில்நுட்பம் பயன்படுத்தி கோவை ஜி.என். மில்ஸ் மேம்பாலப்பணிகள் விரைந்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கோவை மேட்டுப்பாளையம் சாலையில் கவுண்டம்பாளையம் பகுதியில் மேம்பால பணிகள் நடந்து வந்தது. இந்த பணிகள் 100 சதவீதம் நிறைவடைந்துள்ளன. இதனை அடுத்து தற்போது ஜி.என். மில்ஸ் மேம்பால பணிகள் தீவிரமடைந்துள்ளன. கோவை மேட்டுப்பாளையம் சாலையில் ஜி.என். மில்ஸ் சந்திப்பில் சுமார் 670 மீட்டர் நீளத்தில் சுமார் 15 தூண்களுடன் மேம்பாலம் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இது குறித்து தேசிய நெடுஞ் சாலைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "ஜி.என். மில்ஸ் மேம்பால பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அதிநவீன தொழில்நுட்பம் மூலம் கான்கிரீட் போடும் பணி, பில்லர்கள் மேல் சாலை அமைக்கும் பணி போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் மேம்பால பணிகள் விரைந்து முடிக்க வாய்ப்புள்ளது" என்றார்.

---

# கராத்தே சிறப்பு பயிற்சி



கோவையில் பெஸ்ட்வே மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி சார்பில் கராத்தே சிறப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு கோவை மாவட்ட உடற்பயிற்சி சங்கத் தலைவர் ஜிம் சுகுமாறன் பெல்ட் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். உடன், கராத்தே மாஸ்டர் ஜெமிஷா உள்ளார்.

---

## கோவையில் முழுக்க முழுக்க
# பெண்களே நடத்தும் தபால் அலுவலகம்

தி கோவை மெயில்

கோவை வேளாண் பல்கலை வளாகத்திற்குள் அமைந்துள்ள அஞ்சலகத்தை முழுக்க பெண்களே இணைந்து நடத்தி வருகின்றனர்.

கோவை லாலி சாலையில் உள்ள துணை அஞ்சல் அலுவலகம் 1908ம் ஆண்டு துவங்கப்பட்டது. நூற்றாண்டுகளை கடந்த இந்த தபால் நிலையம், வேளாண் பல்கலை வளாகத்திற்குள் அமைந்துள்ளது.

இங்கு ஒரு பெண் துணை அஞ்சல் அதிகாரி, 3 பெண் அஞ்சல் அலுவலர்கள், 3 பெண் தபால்காரர்கள், ஒரு பெண் திறன் ஊழியர், ஒரு துப்புரவாளர் என 9 பேரும் பெண்களாகவே பணியில் உள்ளனர்.

இதுகுறித்து துணை அஞ்சல் அதிகாரி நிர்மலா கூறியதாவது: இந்த அஞ்சலகத்தில் சிறு சேமிப்பு பிரிவுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் செல்வமகள் சேமிப்பு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், உள்நாட்டு வெளிநாடுகளுக்கு தபால்கள் மற்றும் பார்சல்கள் அனுப்பும் சேவை, ஆதார் அட்டையில் பெயர் திருத்தம் மற்றும் முகவரி திருத்தம் செய்யும் சேவைகள் செயல்படுத்தப்படுகிறது. தினமும் 20 முதல் 30 பைகள் பார்சல் அனுப்பப்படுகிறது. இதனை செய்வது ஒரு பெண் ஊழியர்.

52 வயதான பெண் தபால்காரர் நடந்தே சென்று தபால்களை விநியோகம் செய்கிறார். சோர்வடையாமல் பணியாற்றுகிறோம். 2018-19 ஆம் ஆண்டில் அனைத்து பிரிவுகளிலும் எங்கள் அலுவலகம் முதன்மை அலுவலகமாக திகழ்ந்து விருதுகளை பெற்றுள்ளது.

தபால் துறை பெரிய துறையாக உள்ளது. இத்தனை தபால் அலுவலகங்கள் இருந்தாலும், எங்களது அலுவலகத்தை பெண்கள் மட்டும் பணியாற்றும் அலுவலகமாக தேர்வு செய்தது பெருமை அளிக்கிறது.

இதற்காக எங்கள் மேற்குமண்டல அஞ்சல் துறை தலைவர் சுனிதா அயோத்யா, பரிந்துரைத்த முதுநிலை அஞ்சல் கண்காணிப்பாளர் கோபாலன், உதவி அஞ்சல் கண்காணிப்பாளர் அசோக்குமார் எங்கள் அஞ்சல் அலுவலகம் சார்பாக நன்றியை தெரிவிக்கிறோம். எல்லா வகையிலும், அனைத்து சேவைகளிலும் முன் மாதிரியாக செயல்படுவோம் என கூறினார்.

---

# செவிப்புலன் பரிசோதனையும், விழிப்புணர்வின் பலனும்!

தி கோவை மெயில்

கருவாக இருந்து உடலாக மலர்ந்து பத்து மாதங்களுக்கு பின் முதன்முதலாக உலகத்திற்குள் வந்துசேரும் குழந்தைகள் முதலில் செய்வது அழுவதே.

அந்த முதல் அழுகை சத்தத்தை கேட்டதும் மனதில் தோன்றும் பேரின்பத்தை வெளிப் படுத்த வார்த்தைகள் இல்லாமல் பெற்றோரும், குடும்பத்தினரும் நிற்பர்.

ஆனால் தாயின் தாலாட்டு பாடலை கூட கேட்க முடியாமல் ஒரு குழந்தை நிசப்தத்தில் மூழ்கி இருக்கும்போது அதன் நிலை எப்படி இருந்திருக்கும்? இதை பற்றி தான் இங்கு காணவிருக்கிறோம். அதற்கு முன்...



### முக்கிய சோதனை :

மேலை நாடுகளில் குழந்தைகள் பிறந்த சில நாட்களிலேயே அவர்களின் எதிர்கால நலனுக்காக கட்டாயமாக சில முக்கிய மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வார்கள்.

1990களின் இறுதியில் அமெரிக்காவின் வர்ஜினியா மாநிலத்தை சேர்ந்த மருத்துவர் பெரீ ஸ்ட்ராஸ்னிக் என்பவர் எடுத்த முயற்சியால் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் செவிப்புலனை பரிசோதனை செய்வது முதல் கட்டமாக அங்கு கட்டாயமாக்கப்பட்டது.



இந்த சட்டம் இப்போது வளர்ந்த பல நாடுகளில் பின்பற்றப்படுகிறது. இந்தியாவிலும் பல நகரங்களில் உள்ள பல்துறை சிறப்பு மருத்துவமனைகளில் கடைபிடிக்கப்பட்டாலும் சிறு மருத்துவ மனைகளில் இது அவ்வளவாக இருப்பதில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

### முதன்முதலாய் தாயின் குரல் கேட்ட சேய்:

கிறிஸ்டி என்ற அமெரிக்க பெண்ணிற்கு பிறந்த குழந்தை சார்லி. பிறவியிலேயே இந்த குழந்தைக்கு செவிகளின் திறன் மிக மிக குன்றியிருந்தது. நல்ல வேளையாக அங்கு அந்த குழந்தை செவிப்புலன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதால், அதற்கு உள்ள குறைபாடு பெற்றோர்க்கு உடனே தெரியப்படுத்தப்பட்டது.

ஹீயரிங் எய்ட் (Hearing aid) எனும் கருவி முதலில் அந்த குழந்தைக்கு பொருத்தப்பட்டது. அதற்கு முன்புவரை தன்னுடைய தாய் தன்னை கொஞ்சுவதை கேட்டிராத அந்த குழந்தை, அந்த கருவி மூலம் கேட்க துவங்கியது.

சில மாதங்களில், அறுவை சிகிச்சை மூலம் அந்த குழந்தையின் செவிகளில் காது உட்பதியக் கருவி (cochlear implant) பொருத்தப்பட்டது. ஒரு மாத இடைவேளைக்கு பின் குழந்தையின் காதிற்குள் அதன் சேவைகள் துவக்கி வைக்க மருத்துவர்கள் முடிவு செய்தனர்.

இவை நடந்தது 2018ல். அதற்கு பின்னர் அந்த குழந்தை பெற்றோர்கள் உதவியுடன் மெல்ல மெல்ல தன்னை சுற்றி நடப்பதை நன்கு கேட்கத் துவங்கியது.

தற்போது அந்த குழந்தை பள்ளி செல்ல துவங்கியிருக்கிறது, அதன் தாயும் செவிகளில் பின்னடைவு உள்ள குழந்தைகள் நலன் பற்றி சமூக வலைதளங்களில் பேசிவருகிறார்.

தொழில்நுட்பமும் அறிவியலும் வளர்ந்துள்ளதால் மட்டும் இது சாத்தியமானதா என்றால்... இல்லை. விழிப்புணர்வும், மருத்துவர்களின் அறிவுறுத்தலும் தான் இதற்கு பெரும் உதவியாக இருந்துள்ளது.

ஆரம்ப நிலையிலேயே குழந்தைகளின் உடலநலன் மீது அதிக கவனம் செலுத்துவது அவர்களின் எதிர்காலத்திற்கு பெற்றோர்கள் தரும் விலைமதிப்பில்லா பரிசு ஆகும்.

# இலவச மருத்துவ முகாம்



உலக மகளிர் தினத்தை முன்னிட்டு கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் கோவை மாவட்ட காவல்துறை மற்றும் கே.எம்.சி.ஹெச் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து மகளிர் காவலர்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனை மற்றும் பரிசோதனை முகாமை நடத்தியது. இந்த முகாமினை கே.எம்.சி.ஹெச் நிர்வாக இயக்குனர் டாக்டர் அருண் பழனிசாமி கலந்துகொண்டு துவக்கி வைத்தார்.

# புரிந்துணர்வு ஒப்பந்தம்



ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் உயிர்வேதியியல் துறை மற்றும் நுண்ணுயிரியல் துறையின் சார்பில் கோவையில் உள்ள மெடிடேஷன்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் லட்சுமிநாராயணசுவாமி மற்றும் மெடிடெக் சொல்யூஷன்ஸின் முதன்மை செயல் அலுவலர் விக்னேஸ்வர பாண்டியன் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

# ஓம் ஸ்ரீ போகா சித்த மருத்துவமனை துவக்கம்



கோவை காந்திபுரம் பகுதியில், போகா அறக்கட்டளை சார்பில், ஓம் ஸ்ரீ போகா சித்த மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் துவக்கவிழா சமீபத்தில் நடைபெற்றது. கொடிசியா தலைவர், ரமேஷ் பாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். ஆர்.வி.எஸ் கல்வி அறக்கட்டளை தலைமை செயல் அதிகாரி நடராஜன் மற்றும் சசிதர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

# வானவில்லில் வண்ணம் இல்லையென்றால்!



தி கோவை மெயில்

பட்டாம்பூச்சி மீது யாருக்கு தான் ஆசை இருக்காது! உலகின் சிறந்த கலைஞன் என்று கருதப்படும் பாபுலோ பிக்காசோ கூட வெள்ளை தாளில் அத்தனை நிறங்களை தீட்டியிருக்க முடியாது. ஆனால் இயற்கை அத்தனை நிறத்தையும் இந்த வண்ணத்து பூச்சியின் மீது தீட்டியுள்ளது என்றே சொல்லலாம்.

உலகில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வண்ணத்துப்பூச்சி இனங்கள் உள்ளன. இவற்றில் தமிழ் நாட்டில் வெறும் 325 இனங்களே காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த 325ல் 74% அதாவது 240 வகை வண்ணத்து பூச்சிகள் கோவையில் உள்ள சிறுவாணி பகுதியில் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதை கண்டறிய The Nature and Butterfly Society எனும் அமைப்பு 2015 முதல் 2020 வரை ஆய்வு நடத்தி இந்த தகவல்களை வெளியிட்டிருந்தது.

நாம் நம் வீட்டருகே காணக்கூடிய பட்டாம்பூச்சிகள் சராசரியாக 1 வாரம் மட்டுமே வாழும். பிற வகை வன பட்டாம்பூச்சிகள் கிட்டத்தட்ட ஒரு மாதம் முதல் பருவநிலை எப்படி உள்ளதோ அதற்கேற்ப வாழக்கூடும்.

சுற்றுசூழல் பாதிக்கப்பட்டால் வெறும் 1 மாதம் மட்டுமே வாழக்கூடிய இனங்களும் வெகுவாக அழியும். உலக புகழ் பெற்ற National Geographic குழுமம் கடந்த ஆண்டு வெளியிட்ட ஒரு முக்கிய கட்டுரையில் ஐரோப்பிய கண்டத்தில் பல பட்டாம்பூச்சி இனங்கள் அழிந்து வருவதை தெரிவித்திருந்தது.

மேலும் பல அறிவியல் ஆய்வாளர்கள் ரசாயன மாசு, பருவநிலை மாற்றம் ஆகியவைக்கும் பட்டாம்பூச்சிகள் மறைவதற்கு உள்ள தொடர்பை சமீபத்தில் தெரியப்படுத்தியிருந்தனர்.

வானவில்லில் வண்ணம் இல்லையென்றால் அழகாகவா இருக்கும்? வருங்காலத்தின் மீது கவனம் இருக்க வேண்டும் மக்களே! பருவநிலை மீது கவனம் தேவை.

# திருக்குட நன்னீராட்டு விழா



கோவை மாவட்டம் வழுக்குப்பாறை கிராமத்தில் உள்ள அருள்மிகு ரங்கராமர் திருக்கோயிலில் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றது. தென்சேரிமலை ஆதீனம் தவத்திரு முத்துசிவராமசாமி அடிகளார், ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ மணவாள மாமுனிகள் சன்னதி 24 வது பட்டம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் சுவாமிகளும் விமான கலசத்திற்குப் புனித நீராட்டித் திருக்குட நன்னீராட்டை நடத்தி வைத்தனர். கோயிலின் தலைவரும், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் செயலருமான வாசுகி, பொருளாளர் மருத்துவர் பரமசிவன் விழாவை முன்னின்று நடத்தினர்.

## ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரியில்
# சர்வதேச அளவிலான கருத்தரங்கம்



நிகழ்ச்சியில் கருத்தரங்க மலரை வெளியிட்ட (வலமிருந்து 2வது) ஜீவிதா சத்தியநாராயணன். அருகில் சிவக்குமார்.

தி கோவை மெயில்

ஸ்ரீராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தகவல் தொழில்நுட்பத் துறை சார்பில், கணினி நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்பம் என்ற தலைப்பில், சர்வதேச அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது.

இதன் தொடக்க விழாவிற்கு கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் சிவக்குமார் தலைமை வகித்தார்.

சென்னை ஜோகோ கார்ப்பரேஷன் மனிதவளத்துறை மேலாளர் ஜீவிதா சத்திய நாராயணன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசினார்.

ஓமன் நிஸ்வா பல்கலைக்கழக பொருளியல் கல்லூரியின் தகவல் தொழில் நுட்பத்துறை இணைப் பேராசிரியர் மற்றும் டீன் ஆரோக்கியசாமி, இந்தோனேஷியா ஏபிபி சினார்மஸ் தலைமை தரவுகள் விஞ்ஞானி சங்கரய்யா ஸ்ரீராமுலா ஆகியோர் இணைய வழியில் தொழில்நுட்ப உரையாற்றினர்.

அதைத் தொடர்ந்து பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்கள் 65 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தனர்.

# கே.பி.ஆர் கல்லூரியில் கலந்துரையாடல்

தி கோவை மெயில்

கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியின் கேரியர் டெவலப்மெண்ட் சென்டர் சார்பில் மேலாண்மையுடன் சிறந்து விளங்கும் மையம் பற்றிய கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு Virtusa நிறுவனத் தலைவர்கள் கிருதிவாசன், தலைவர் - வியூக ஈடுபாடு மற்றும் கூட்டாண்மை, வெங்கடநாராயணன், சீனியர், வி.பி - டெக்னாலஜி, கமருதீன் கோட்டூர் அப்துல் ரசாக், இயக்குனர் - டெலிவரி, மற்றும் தினேஷ் வாரியர் சீனியர் ஆர்க்கிடெக்ட் - டெக்னாலஜி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் முதல்வர் பாலுசாமி வாழ்த்துரை வழங்கினார். கல்லூரியின் ஆலோசகர் ராமச்சந்திரன், தொழில் மேம்பாட்டு மைய இயக்குனர் தாமரை கண்ணன் மற்றும் முதன்மையர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பாடத்திட்டம், விருதுகள், சாதனைகள், உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள், மாணவர் பலம், மாணவர்களின் சாராத மற்றும் இணை பாடத்திட்ட செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினர். பின்னர், வெங்கடநாராயணன் மற்றும் குழுவினர் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

# மகளிர் தின நிகழ்வு



உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களின் உடல் நலத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் சூலூர் கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் மகளிர் தின நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சூலூர் பேரூராட்சி தலைவர் தேவி மன்னவன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். கே.எம்.சி.ஹெச் குழுமத்தின் இயக்குனர் மதுரா பழனிசாமி, மகப்பேறு மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்துகொண்டனர்.

# அரசு பள்ளியை புதுப்பித்த ஆற்றல் அறக்கட்டளை

தி கோவை மெயில்

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அருகே உள்ள அலங்கியம் அரசு மேல்நிலைப் பள்ளி, ஆற்றல் பவுண்டேசன் சார்பில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பித்து ஒப்படைக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் ஆற்றல் அறக்கட்டளை அரசு பள்ளிகளை தேர்ந்தெடுத்து நமது பள்ளிகள் என்ற திட்டத்தில் ஈரோடு, நாமக்கல், திருச்சி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அரசு பள்ளிகளை கண்டறிந்து மேம்படுத்தி அதன் தரத்தை உயர்த்திவருகிறது.

அதன் தொடர்ச்சியாக தாராபுரம் வட்டம் அலங்கியம் அரசு மேல்நிலைப்பள்ளி பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் உள்ளாட்சி அமைப்பு நிர்வாகிகள் தலைமையில் துவக்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஊராட்சி மன்றத் தலைவர் தேவி, பள்ளி தலைமையாசிரியர் பொன்னுசாமி, பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் ஆசைத்தம்பி ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் ஆற்றல் பவுண்டேசன் தலைவர் அசோக்குமார் கூறுகையில், மாணவர்களுக்கு சத்தான உணவுடன் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் பெற சத்துணவு தயாரிக்கும் அறை மிகவும் தூய்மையாக இருக்க அவசியமாகிறது. அந்தவகையில் நாங்கள் எங்கள் குழுவினருடன் ஒவ்வொரு பள்ளியாக சென்று ஆய்வுமேற்க்கொண்டு சிதிலமடைந்து காணப்படும் சுற்றுசுவர்கள் மற்றும் கட்டிடங்கள், கழிப்பிடங்களை புணரமைத்து பள்ளி நிர்வாகத்திடம் ஒப்படைத்து வருகிறோம் என தெரிவித்தார்.

# என்.ஜி.பி கல்லூரியில் சர்வதேச கருத்தரங்கம்



நிகழ்ச்சியில் கருத்தரங்க மலரை வெளியிடும் போது.

தி கோவை மெயில்

டாக்டர் என்.ஜி.பி. தொழில்நுட்பக் கல்லூரியின் இயந்திரவியல் துறை சார்பில் (Design, Manufacturing and Materials Engineering) என்ற தலைப்பில் இரண்டு நாள் சர்வதேச கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கே.எம்.சி.ஹெச் குழுமத்தின் தலைவர் டாக்டர் நல்ல.ஜி.பழனிசாமி மற்றும் டாக்டர் என்.ஜி.பி. கல்விக் குழுமங்களின் செயலர் தவமணி டீ பழனிசாமி தலைமை வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக ஐ.ஐ.டி பாலக்காடு, இயந்திரவியல் துறை முனைவர் சக்ராதர் மற்றும் என்.ஐ.டி திருச்சி உற்பத்தி பொறியியல் துறை முனைவர் சத்தியநாராயணன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். முதல்வர் பிரபா நவீன உலகின் புதிய கண்டுபிடிப்புகளின் முக்கியத்துவதைப் பற்றி எடுத்துரைத்தார். இந்தக் கருத்தரங்கம் இளம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் மேன்மையான கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வகையில் அமைந்திருந்தது.

# இந்துஸ்தான் கல்லூரியில் ரத்த தான முகாம்



இந்துஸ்தான் கல்லூரியில் நடைபெற்ற ரத்த தான முகாமின் போது.

தி கோவை மெயில்

இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ரோட்ராக்ட் கிளப், லயன்ஸ் கிளப் மற்றும் யூத் ரெட் கிராஸ் கிளப், சாந்தி சோஷியல் சர்வீஸ் இணைந்து நடத்திய ரத்த தான முகாம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. ரோட்ராக்ட் கிளப் ஆஃப் ஹிந்துஸ்தானின் தலைவர் அர்மாஷ் அகமது வரவேற்றார். இந்துஸ்தான் கல்வி மற்றும் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் சரசுவதி கண்ணையன், செயலர் பிரியா சதீஷ்பிரபு, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கல்லூரி முதல்வர் பொன்னுசாமி தலைமையுரை ஆற்றினார். ரோட்ராக்ட் கிளப் ஆஃப் ஹிந்துஸ்தானின் செயலாளர் வசந்த் தலைமை விருந்தினர்களை அறிமுகப்படுத்தினார். ரோட்ராக்ட் கிளப்பின் ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் குமார் நன்றியுரை ஆற்றினார்.

யூத் ரெட் கிராஸின் இயக்குனர் பிரபு மற்றும் லயன்ஸ் கிளப்பின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் செல்வப்ரியா ஆகியோர் கூட்டாக இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் 117 யூனிட் இரத்தம் வழங்கப்பட்டது.

# ஆன்லைன் வகுப்பு ஓர் அலசல்!

தி கோவை மெயில்

கோவிட் 19 பெரும் தொற்று வந்த பிறகு கல்வி கற்பிப்பதில் ஒரு பெரும் மாற்றமும் சிறிது பின்னடைவும் ஏற்பட்டிருப்பதாக கல்வியாளர்கள் கருதுகிறார்கள். அதில் ஒரு நியாயமும் இருப்பதாகவே படுகிறது. மொத்தமாக பொது முடக்கம் அறிவித்த பிறகு கல்வி நிலையங்களும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் அதுவே சில மாதங்கள் நீடித்ததும், இரண்டு அலைகளாக மாறியதும் மாணவர்களின் கல்வியில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி விட்டன.

குறிப்பாக ஆன்லைன் கல்வியும் கொரோனா பேட்ச் மாணவர்களும் உருவாகி விட்டார்கள். கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் கல்வி நிலையங்கள் மூடப்பட்டு விட்டதால் மாணவர்களின் கல்வி தடைபடக் கூடாது என்று ஆன்லைன் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் அதன் விளைவுகள் எதிர்பார்த்த நன்மைகளை தரவில்லை என்றே பலரும் கருதுகிறார்கள்.

இந்த ஆன்லைன் வகுப்புகள் தொடங்கிய பிறகு ஏற்பட்ட முதல் விளைவு மாணவர்கள் மீது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு இருந்த கண்காணிப்பு முழுமையாக இல்லாமல் போனது. பள்ளி என்பது கல்வி கற்பிப்பதோடு ஒழுக்கம் கட்டுப்பாடு மிகுந்தவர்களை உருவாக்கும் ஒரு இடமாகவும் இருந்து வந்தது.

கல்விமுறை, பாடத்திட்டம், கற்பிக்கும் முறை என்று பல வேறுபாடுகள் இருந்தாலும் தொடர்ந்து மாணவர்களை முறைப்படுத்தும் பணி பள்ளிகளில் நடந்து வந்தது. நேர மேலாண்மை, உணவு நேரம், வீட்டுப்பாடம், தேர்வு என்று மாணவர்கள் பிசியாக தொடர்ந்து இயங்கி வந்தனர். இவையெல்லாம் நேரடி வகுப்பின் பயன்களாகும்.

ஆனால் பெருந்தொற்று காலத்தில் மாற்று திட்டமாக அறிமுகமான ஆன்லைன் கல்வி இதற்கு நேர்மாறாக பல எதிர்மறை விளைவுகளை கல்வி முறையில் ஏற்படுத்தியுள்ளது. முதலில் ஆசிரியர்கள் மாணவர்களை நேரில் சந்தித்து கற்பிக்க முடியாததால் அடிப்படையாக இருவரிடையே இருந்த வந்த பிணைப்பும் நேசமும் நேரடி தொடர்பும் இல்லாமல் போனது.

தனிப்பட்ட முறையில் மாணவர்கள் பள்ளிகளை மூடுவது போல தங்களுக்குள்ளேயே இணைந்து இயங்க முடியாமல் செயலற்றுப் போயினர். வகுப்புக்கு வருகைப்பதிவு குறைந்துபோனது. கண்ணால் நேருக்கு நேர் பார்த்துப் பாடம் நடத்தும் முறை இல்லாத காரணத்தால் ஆசிரியர்கள் மாணவர்கள் உறவு பொருளற்றுப் போனது. பெரும்பாலான இடங்களில் தொலைக்காட்சி செய்தி வாசிப்பவர் போல ஆசிரியர் பாடம் நடத்துவது திரையில் மட்டும் நடைபெற்றது.



அதேபோல ஆன்லைன் தேர்வுகள் வழக்கமான தேர்வு முறையின் நோக்கத்தை மாற்றி விட்டன. ஒருபுறம் மேல் வகுப்புக்கு தூக்கி விட்டு விடுவார்கள் என்ற அலட்சியம், அசட்டு துணிச்சல், இன்னொருபுறம் புத்தகத்தை பார்த்து கூட தேர்வை சரியாக எழுதாத அவலநிலை ஏற்பட்டது. அதைவிடக் கொடுமை பல மாணவர்களின் கண்களில் ஏற்படும் குறைபாடுகள், திடீரென்று பல மணி நேரம் ஒரு சிறிய திரையில் கவனிக்கத் தொடங்கியதும், அதுவும் பள்ளிப் பாடங்களை கவனித்து உள்வாங்குவது என்பதும் இயலாமல் போனது. கண்கள் சோர்வடைய தொடங்கியதால் கற்றல் குறைபாடுகளோடு, கண் குறைபாடும் சேர்ந்துகொண்டது.

இன்று ஆண்ட்ராய்டு போன் சாதாரணமாக அனைவரிடமும் இருந்தாலும் ஆன்லைன் கல்வி தொடங்கிய பிறகு மொபைல் சந்தை இன்னும் விரிவடைந்தது. இதன் நேரடி பயனாக ஆன்லைன் கல்வியின் பொருளாதார சுமை பெற்றோர்கள் மீது விழுந்தது. பணி வாய்ப்பு குறைந்து பொது மக்கள் பாதிக்கப்பட்டு இருந்த போது சாதாரண நிலையில் இருந்த பெற்றோருக்கு ஆன்லைன் கல்வி மறைமுகமாக சுமையாகிப் போனது.

எனவே அந்த வகையில் இந்த நிலையை படிப்படியாக மாற்றிட விரைவிலேயே இயல்பான நிலை திரும்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதில் அரசு மட்டும் முடிவெடுத்து செயல்படுத்தி வெற்றி கண்டுவிட முடியாது. கல்வியாளர்கள், மருத்துவ வல்லுநர்கள், குறிப்பாக உளவியல் நிபுணர்கள், பள்ளி கல்லூரி நிர்வாகங்கள், தொழில்துறையினர் என பல பிரிவினரின் ஆலோசனைகள் பெறப்பட்டு செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

அதற்கும் மேலாக இந்த கோவிட் 19 பெருந்தொற்று பல துறைகளுக்கும் பல எச்சரிக்கைகளை அளித்திருக்கிறது. அந்த வகையில் இனி எதிர்காலத்தில் இது போன்ற நோய் தாக்குதல்கள் ஏற்படும் பொழுது அதிலிருந்து மீள்வதற்கும், கல்வி சார்ந்த செயல்பாடுகள் பாதிக்கப்படாமல் தொடர்ந்து இயங்கவும் வழிவகைகள் செய்யப்பட வேண்டும். ஆன்லைன் கல்விமுறைகளில் உள்ள குறைபாடுகள் கண்டறிந்து களையப்பட வேண்டும். இல்லை என்றால் எதிர்கால சமூகம் பல பாதிப்புகளை சந்திக்க நேரிடும். இன்றைய மாணவர்கள் தான் நாளைய இந்தியாவை கட்டமைக்கும் சிற்பிகள் என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

---

கே.ஜி.ஐ.எஸ்.எல் கல்வி நிறுவனம் நடத்தும்

## டீப் ரேசர் லீக்

தி கோவை மெயில்

கே.ஜி.ஐ.எஸ்.எல் கல்வி நிறுவனம் மாணவர்களின் செயல்திறனை கண்டறிந்து அவற்றை மேம்படுத்தி ஊக்குவிப்பதில் என்றுமே தனித்தன்மையுடன் செயல்பட்டு வருகிறது.

அவ்வகையில் மாணவர்களிடையே செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர வழி கற்றல் திறன்களை மேம்படுத்தி அவற்றை செயல்படுத்தும் வகையில் ஒரு கற்றல் அனுபவத்தை உருவாக்குவதே AWS டீப் ரேசர் முயற்சியின் நோக்கம் ஆகும். மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் கேஜி குழுமம் நடத்திய டீப் ரேசர் லீக், கேஜி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்வினை கே.ஜி.ஐ.எஸ்.எல் கல்வி நிறுவனத்தின் நிறுவனர் அசோக் பக்தவச்சலம், துவக்கி வைத்தார். கேஜி மருத்துவமனையின் நிறுவனர் பக்தவத்சலம் இந்நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் வழங்கி சிறப்பித்தார்.

---

எஸ்.என்.ஆர் நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாராயணசுவாமிக்கு

## ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’

தி கோவை மெயில்

ரோட்டரி கிளப் ஆஃப் காட்டன் சிட்டி சார்பில், எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் லட்சுமிநாராயணசுவாமி அவர்களுக்கு ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’ வழங்கப்பட்டது.

விருது வழங்கும் விழா, ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை வளாகத்தில் உள்ள ஸ்ரீ வேலு மணியம்மாள் நினைவு அரங்கில் நடைபெற்றது. ரோட்டரி கிளப் ஆஃப் காட்டன் சிட்டி தலைவர் அஜய் குமார் குப்தா தலைமை வகித்து வரவேற்றுப் பேசினார். கோபால் சர்மா விருதாளரை அறிமுகம் செய்து வைத்துப் பேசினார்.

விழாவிற்கு சிறப்பு விருந்தினராக ரோட்டரி 3201 மாவட்ட முன்னாள் ஆளுநர் மற்றும் மாவட்டப் பயிற்றுநர் பதி கலந்து கொண்டு கல்வி, மருத்துவம், விளையாட்டு, கொரோனா தொற்று காலத்தில் பொதுமக்களுக்கு உதவியது மூலமாக சமூகத்திற்கு செய்து வரும் சேவைக்காகவும், சைமா அமைப்பின் முன்னாள் தலைவராக செயல்பட்டு தொழில் துறைக்கும் பங்காற்றியமைக்காவும், எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாராயணசுவாமியை பாராட்டி, வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்தார். அதைத்தொடர்ந்து லட்சுமி நாராயணசுவாமி ஏற்புரை வழங்கினார். இவ்விழாவில் உதவி கவர்னர் சங்க், அருள்சாமி, மாவட்டத் தலைவர் - தொழிற்பிரிவு முத்துராமன், பிரசன்னா கோத்தாரி, குமார்பால் கே.தாகா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



லட்சுமி நாராயண சுவாமிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினை ஏ.வி. பதி வழங்குகிறார்.

---

## கே.பி.ஆர். கல்லூரியில் கேம்பஸ் கனெக்ட்

தி கோவை மெயில்

கே.பி.ஆர். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் தொழில் மேம்பாட்டு மையம் சார்பில் மாணவர்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள துறையின் பின்னணி, அத்துறையில் உள்ள வேலைவாய்ப்புகள், அதற்கு தேவைப்படும் தகுதிகள் உள்ளிட்ட விபரங்களை தெரிந்து கொள்ளும் பொருட்டு “கேம்பஸ் கனெக்ட் 2022” நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் இந்த நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், உயர் பதவிகளில் உள்ள அரசு அதிகாரிகள் என சுமார் 250 பேச்சாளர்கள் இதுவரை நடந்த நிகழ்வுகளில் பங்கு பெற்றுள்ளனர்.

இந்நிகழ்ச்சி, கல்லூரியின் தலைவர் கே.பி.ராமசாமி வழிகாட்டுதலில், கல்லூரியின் முதல்வர் அகிலா தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக ஐ.சி.டி அகாடமியின், தலைமை நிர்வாக அதிகாரி ஹரிபாலச்சந்திரன், விர்ச்சுஸா கார்பொரேட் நிறுவனத்தின் அதிகாரி கீர்த்திவாசன் சிவராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், அரசு அதிகாரிகள், நிறுவனங்களின் மனிதவள மேம்பாட்டு அதிகாரிகள், தலைமை செயல் அதிகாரிகள், தலைமை பொறுப்பில் இருக்கும் அதிகாரிகள் கலந்துகொண்டு தங்களது திறன் மற்றும் அனுபவங்களை மாணவர்களிடத்தில் பகிர்ந்துகொண்டனர்.

கல்லூரியின் முதல்வர் அகிலா பேசும்போது தொழில் நிறுவனங்களுடன் இணைந்து இருப்பதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு மாணவர்கள் கார்ப்பரேட் நிறுவனங்களில் எதிர் பார்ப்பையும் தெரிந்திருக்க வேண்டும் என்றார்.

---

# பாதி உண்மை, பாதி கற்பனை

சு.ரம்யா
தி கோவை மெயில்

நவீன தமிழ் இலக்கியத்தின் மிக முக்கிய எழுத்தாளரான எஸ். ராமகிருஷ்ணன், கடந்த 25 ஆண்டுகாலமாக சிறுகதைகள், நாவல், கட்டுரைகள், நாடகம், குழந்தைகள் இலக்கியம், மொழிபெயர்ப்பு, சினிமா, ஊடகம், இணையம் என்று பல்வேறு தளங்களிலும் தீவிரமாக இயங்கி வருபவர்.

மனித மனங்களின் அன்பை, துயரை, பரிதவிப்பை தன் எழுத்துகளின் வழியே கடத்தும் இவர், இந்தியா முழுவதும் சுற்றியலைந்து தான் பெற்ற அனுபவங்களை, பரவசத்தை தன் எழுத்தின் மூலம் வாசகனுக்குக் கடத்துவதில் வல்லவர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஆனந்த விகடன் வலைதள பக்கத்தில் அவரின் உரையாடல் இடம்பெற்றிருந்தது. அதில் இடம்பெற்ற பதிவின் தொகுப்பினை இங்கே காணலாம்.

### புதுமையும், கற்பனையும்:

மனிதனின் தனித்துவமாக நான் நினைப்பது அவனுடைய கற்பனையை தான். வேறு எந்த ஜீவராசிகளுக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பாக மனிதருடைய கற்பனை உள்ளது.

கற்பனையின் துணையைக் கொண்டு தான் மனிதன் அனைத்து கலைகளையும் உருவாக்கினான். குறிப்பாக படைப்புகளை உருவாக்குவதில் மனிதனுக்கு இருந்த ஒரு மேதைமைக்கு காரணம் அவனுடைய கற்பனையின் ஆற்றல் தான். ஓவியம், இசை, எழுத்து, கவிதை என படைப்பாற்றல் என்று சொல்லக் கூடிய அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது கற்பனையே.

மனிதர்கள் புதிது புதிதாக கற்பனை செய்து கொண்டே இருப்பார்கள். அவை புதிய வடிவம் பெற்று தொழில் நுட்பமாக மாறுகின்றன. ஒவ்வொரு மனிதரின் கற்பனையும் தனியானது. புதுமையும், கற்பனையும் ஒன்றோடொன்று தொடர்புடையது. காலத்தை தாண்டி தனது கற்பனையின் மூலம் பெரிய படைப்புகளை மனிதர்கள் செய்து இருக்கிறார்கள்.

### தெரிந்த உலகம் தெரியாத கதை:

எனது ஆசிரியர் வகுப்பில் ஒரு சமயம் கதை கூறினார். அனைவருக்கும் தெரிந்த கதைதான். காகம் பானையில் இருக்கும் தண்ணீரை மேல் கொண்டு வருவதற்காக கல்லை போட்டு மேல் கொண்டு வரும் கதை. அந்த கதையை கூறி முடித்த பின் அவர் கூறியது, அந்த காகம் சிந்திக்க தெரிந்தது என்றும் புதிய வழியை அது கண்டறிந்துள்ளது என்றும் கூறினார். இதை கூறி முடித்த பின்னர் “எல்லா கதையும் பாதி உண்மை, பாதி கற்பனை” என்று கூறினார்.

அவர் கூறிய பாதி உண்மை, பாதி கற்பனை என்ற ஒரு வரி என்னை எழுத்தாளனாக உருவாக்கியதில் பெரும் பங்கு வகித்துள்ளது. சிறுவயதில் காகம் எங்கிருந்து இந்த சிந்தனையை பெற்றது என்று யோசிக்க ஆரம்பித்தேன். மனிதர்களிடம் இருந்து இந்த சிந்தனையைப் பெற்றதா அல்லது தானாக பெற்றதா என்று யோசித்த போது, நமக்கு தெரிந்த ஒரு உலகை தெரியாததாக கதை மாற்றுகிறது.

### நிஜத்தில் இருந்து பிரியாது:

நாம் அடிக்கடி பார்த்த ஒரு விஷயம் கதையில் வரும்போது புதிதாக தோன்றும். கதையில் இருக்கும் உண்மை, கற்பனை என்ற அளவு எவ்வளவு உள்ளது என்று கண்டுபிடிக்க முடியாது. மேலும் அதில் எந்த பாதி உண்மை என்றும் கண்டுபிடிக்க முடியாது. கற்பனையின் உடையே உச்சமே கற்பனையை நிஜத்தில் இருந்து பிரிக்க முடியாது என்பது தான்.

வாசகன் எது உண்மை என்று கருதுகிறானோ அது கற்பனையாக இருக்கலாம். கற்பனை என்று நினைப்பது உண்மையாக இருக்கலாம். மனிதர்களைப் போல கதைகளும் உலகம் முழுவதும் பயணித்துக் கொண்டே இருக்கின்றன.

நேரடியாக விலங்குகளின் மீது அச்சம் இருந்தாலும், கதைகள் வழியாக விலங்குகள், பறவைகள், தாவரங்கள் நம்முடன் பேச ஆரம்பித்தன. உலகம் எதையெல்லாம் அச்சுறுத்தி, நம்மை விட்டு விலக்கி வைத்திருக்கிறதோ அதையெல்லாம் கதைகள் நமக்கு தருகிறது.

> **மனிதன் உண்மையை தேடுபவனாக இருக்கிறான். ஆனால் முழு உண்மையை ஏற்றுக் கொள்ளாதவனாக இருக்கிறான். சந்தர்ப்பத்திற்கு ஏற்ப உண்மையை வளைத்து கொண்டே இருப்பதுதான் மனிதன் உடைய இயல்பாக இருக்கிறது**

சிங்கத்தை நேரில் பார்ப்பதற்கு முன்னரே கதை வழியாக பார்த்து விடுகிறோம். ஆனால் சிங்கத்தை சர்க்கஸ் கூண்டிற்குள் பார்க்கும்போது கதையில் பார்த்த சிங்கமும், கூண்டில் பார்த்த சிங்கமும் ஒன்றல்ல எனத் தோன்றுகிறது. காட்டு ராஜா என்று சொல்லக்கூடிய சிங்கத்தை ஏன் கூண்டிற்குள் அடைத்து வைத்து இருக்கிறார்கள் என்ற கேள்வி எழுகிறது.

ஆனால் சர்க்கஸில் இருக்கும் சிங்கம் எனக்கு பிடிக்கவில்லை. கதையில் கண்ட காட்டுக்கே ராஜாவாக இருந்த சிங்கம், காட்டின் உயரமான பாறையில் ஏறி நின்று சூரிய உதயத்தை பார்க்கும் சிங்கத்தை தான் எனக்கு பிடித்திருந்தது.

”மனிதர்கள் தங்களின் சுய லாபத்திற்காக எதை வேண்டுமானாலும் அடக்கி, ஒடுக்கி தனக்கானதாக மாற்றி பணிய வைப்பார்கள்”. பின்னாட்களில் இதில் இருந்து நான் புரிந்து கொண்டது உங்களது வாழ்க்கை உங்களை காட்டு சிங்கமாக ஆக்க போகிறதா அல்லது சர்க்கஸ் சிங்கமாக ஆக்க போகிறதா என்பது உங்கள் கையில் தான் உள்ளது என்பதை தான்.

சர்க்கஸ் சிங்கமாக இருந்தோமானால் யாரோ ஒருவரின் சவுக்கடிக்காக முக்காலியில் ஏறுவீர்கள். ஆனால் ஒரு காட்டின் சிங்கமாக இருந்தோமானால் தனி சுதந்திரம் இருப்பதோடு, முடிவில்லாத வெளியில் தனியாக ஒரு பாதையில் நடந்து செல்லலாம்.

### உண்மையும், எதிர் வினையும்:

சிறு வயதில் ஆசிரியர் சொன்ன “கதை என்பது பாதி கற்பனை, பாதி உண்மை” என்ற வரி எனக்குள் வளர்ந்து கொண்டே இருக்கிறது. முழு உண்மையை ஒரு கதை கூற கூடாதா என்றால், முழு உண்மை ஒருபோதும் இந்த உலகிற்கு வேண்டியதில்லை. ஏனென்றால் முழு உண்மையை கண்ட போதெல்லாம் இந்த உலகம் அதற்கு கடுமையான எதிர் வினையை அளிக்கிறது.

மனிதன் உண்மையை தேடுபவனாக இருக்கிறான். ஆனால் முழு உண்மையை ஏற்றுக் கொள்ளாதவனாக இருக்கிறான். சந்தர்ப்பத்திற்கு ஏற்ப உண்மையை வளைத்து கொண்டே இருப்பதுதான் மனிதன் உடைய இயல்பாக இருக்கிறது.

பொய் என்பது வெறும் கற்பனை மட்டுமல்ல. பொய் என்பதில் உண்மையும் உள்ளது. ஆனால் குறைவாக உள்ளது அல்லது உண்மை மறைக்கப்பட்டு இருக்கிறது. அதனால் தகுந்த நேரத்தில் தகுந்த விதமாக சொல்லும்போது, பொய் கூட அங்கீகரிக்கப்படுகிறது.

### இரு வழி பாதை:

இந்த தலைமுறை, மெல்ல கற்பனையின் உடைய ஆற்றலை இழந்து கொண்டே வருகிறது அல்லது அவர்கள் கவனம் பெறவேயில்லை அல்லது அவர்களுக்கு கற்பனையின் உடைய வசீகரம் பெரிதாக இல்லை என்றே கூறலாம். அவர்களின் கற்பனை ரெடிமேடாக உள்ளது. வணிக காரணங்களுக்காக இந்த உலகம் எதையெல்லாம் செயற்கையாக செய்கிறதோ அதையெல்லாம் கற்பனை என்று நம்புகிறார்கள்.

ஒரு இலக்கியம் அல்லது உரை அதனுடைய அலைகளை மனதினுள் எழுப்பி கொண்டே இருக்கும். இன்றைக்கு நீதி போதனைகள் வகுப்பு என்பதே இல்லை. அதையும் தாண்டி நீதி என்ற சொல்லே இன்று கேலி பொருளாக மாறி விட்டது. ஆனால் உண்மை அப்படி அல்ல. மனிதனுக்கு எல்லா காலத்திலும் நீதி, அறம் வேண்டும். நீதி மறுக்கப்படும் போதேல்லாம் அதற்காக குரல் எழுப்ப வேண்டும்.

எழுத்து, இலக்கியம் என்றும் அனைத்திற்கும் அடிப்படையான ஒரு தேவை இருக்கிறது. அது நீதியின் குரலை ஒலிக்க வேண்டும். அதுவும் ஒரு சாமானியனுக்கான நீதியாக இருக்க வேண்டும். அவனுக்கு மறுக்கப்பட்ட நீதிக்கான குரல் ஒலிக்கும் போது தான் இலக்கியம் பேரிலக்கியமாக மாறுகிறது.

எல்லா இதிகாசத்திற்கு பின்பும் அறத்தின் குரல் உள்ளது. அது மனிதனுக்கு ஒரு நம்பிக்கையை தருகிறது. வாழ்க்கையில் நீதி மறுக்கப்பட்டாலும் படைப்பில் நீதி கிடைக்கும். படைப்பில் இருந்து அதை இன்னொரு தலைமுறை நிஜமாக மாற்றும். அப்போது அது படைப்பில் இருந்து வாழ்க்கைக்கு வரும், பின்னர், வாழ்க்கையில் இருந்து படைப்புக்கு வரும். இது ஒரு இரு வழி பாதை போல தான்.

எந்த கதையைப் படித்தாலும் அதில் உள்ள உண்மையையும், கற்பனையையும் பாருங்கள். உண்மை கற்பனையால் எப்படி செழுமைபடுகிறது என்றும், கற்பனை உண்மையை எப்படி ஒளிர வைக்கிறது என்பதையும் பாருங்கள். அப்படி பார்த்தால் கதையையும் புரிந்து கொள்வீர்கள், கதை வழியாக வாழ்க்கையும் புரிந்து கொள்வீர்கள்.

